# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 33வது கூட்டறிக்கை 2020.11.10

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 33வது அமர்வு 2020.11.10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 04. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 06. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 33வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த அமர்வில் எமது சபையில் JCB வாகனம் திருத்துவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை 7000.00 ரூபாவாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதை நான் சபையில் கேட்டிருந்தேன். அதனை நீங்கள் எமது செயலாளர் அவர்களிடம் அதைப் பற்றிய தெளிவை பெற்றுக் கொள்ளலாம் என்று கூறினீர்கள். இதுவரைக்கும் எனக்கு எந்தவிதமான தெளிவும் இல்லை. ஆகவே இந்த சபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில் தரப்படாததனால் இதில் சபையின் ஏகமனதான தீர்மானம் என்பதை விடுத்து சபைத் தீர்மானமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை கௌரவ தவிசாளர் அவர்களுக்கு விணயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் செலவீனங்களை சுட்டிக் காட்டும் போது அதன் விபரங்களை எடுப்பதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. நீங்கள் சுட்டிக்காட்டிய விடயம் ஒரு JCB வாகனம் சேவிஸ் செய்வதற்கு இவைகள் தனியார் வாகனங்கள் இல்லை. இவைகள் அரச வாகனங்கள். உத்தியோகத்தர்கள் அதற்கு பொறுப்பு கூற வேண்டும். நீங்கள் கௌரவ உறுப்பினராக அந்த விபரங்களை செயலாளர் உங்களுக்கு தந்திருக்காவிட்டால் அது ஒரு குறைபாடு. அதை நீங்களும் அக்கறை காட்டி இருந்தால் அதை எடுத்திருக்கலாம். அதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் நிச்சயமாக அடுத்த முறை அதை செய்யும் போது கவனத்திற் கொள்ளலாம். பொதுவாக வாகனங்கள் ஒவ்வொருவரும் பராமரிக்கும் விதத்தில் வித்தியாசங்கள் உள்ளது. அதனால் நாங்கள் 7000.00 ரூபா பொருத்தம் இல்லை என்று கூறுவதை விட 7000.00 ரூபா எப்படி பிரிக்கப்பட்டுள்ளது என்று பார்த்து அதில் அதிகமாக இருந்தால் நிச்சயமாக அதை குறைப்பதற்கு முயற்சிகள் எடுப்பது நமது கடமை. அந்த வேளையில் எதிர்ப்புகள் எதுவும் இல்லாவிட்டால் அது ஏகமனதாக எடுத்த தீர்மானமாகத்தான் அது அமையும். கருத்து கூறுவதும், எதிர்ப்பதும் இரண்டும் வித்தியாசமான விடயங்கள். ஆனால் உங்கள் கருத்து உள்வாங்கப்பட்டது. அதற்குரிய நடவடிக்கையை இந்த சபை முடிந்ததும் தெளிவுபடுத்தும்படி செயலாளரை கேட்டவனாக, கூட்டறிக்கையை ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, நமது பிரதேச சபையின் தவிசாளராக முதல் 04 வருடங்களும், தற்போது 02 வருடங்களும் நான் உங்களின் ஆதரவோடு செயலாற்றி வருகின்றேன். சபை நடவடிக்கைகளில் எந்த ஒரு அரசியல் பார பட்சமும் இல்லாமல், பிரிவினையும் இல்லாமல் இந்த ஊருக்காக, இந்த ஊருக்கு கடமை செய்யும் சபையாக கருதி நாம் எல்லோரும் கடமையாற்றி வந்திருக்கின்றோம். சென்ற இரண்டு சபை அமர்வுகளிலும் வழமைக்கு மாறாக சில பிரச்சினைகள் இந்த சபையில் ஏற்பட்டது. ஆராவாரங்கள் செய்யப்பட்டது. கேள்விகள் கேட்கப்பட்டது. அவை எல்லாம் ஜனநாயக அரசியலின் மரபுகள். அப்படி இருந்தும் நாம் எந்தக் கட்சிக்கு சொந்தமானவர்களாக இருந்தாலும், எந்தக் கட்சியின் அங்கத்தவர்களாக இந்த சபைக்குள் நாம் இருப்பது இந்த ஊரின் காவலர்களாகவும், மக்களின் பிரதிநிதிகளாகவும். அப்படியாக இருக்கும் போது நமக்குள் எந்த தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் இருந்தாலும் அதற்கு அப்பால் இந்த சபையின் கௌரவத்தை பேணி வெளியில் எதுவாக இருந்தாலும் இந்த சபைக்குள் நாம் எல்லோரும் ஒரு எண்ணத்தோடு செயற்படுபவர்களாக இருக்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள். கேள்விகள் கேட்கலாம், முரண்படலாம். ஆனால் அது நாகரீகமான முறையில் செய்வது உகந்தது என்று நினைக்கின்றேன்.

488/16 இலக்க 13.01.1988 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலமாக பிரதேச சபையின் விதிகள், கூட்டங்களின் அலுவல்களை நடாத்துவதற்கான நடவடிக்கை முறை என்ற ஒரு வர்த்தமானி ஆரம்பத்தில் உங்கள் எல்லோருக்கும் கிடைத்திருக்கும். அதில் ஒரு கூட்டத்தில் எப்படி நாம் நடந்து கொள்வது, கேள்விகள் கேட்பது என்றால் எப்படியான கேள்விகளை கேட்கலாம், எப்போது கேட்கலாம், எப்படி கேட்கலாம் அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் அதில் ஒழுங்காக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. இவைகளை நான் உண்மையாக இந்த சபையில் இவ்வளவு காலமும் நடைமுறைப்படுத்தவில்லை. ஏனென்றால் நாம் எல்லோரும் ஒன்றாக பயணித்தவர்கள், ஒன்றாக பயணிக்க வேண்டியவர்கள். நமக்குள் அரசியல் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அதை நான் தனிப்பட்ட முறையில் எதிரிகளாக இந்த சபைக்குள் இயங்கவும் இல்லை, இயங்க வேண்டிய தேவை ஒருவருக்கும் இல்லை என்று நினைக்கின்றேன்.
நாம் இன்று இருக்கும் அசாதாரண சூழ்நிலையில் நாம் மீண்டு கொண்டு வருகின்றோம் என்ற எண்ணத்தில் இருக்கும் போது மீண்டும் இந்த நாட்டின் நிலை மிகவும் மோசமான திசைக்கு மாறும் போது, நம் எல்லோருக்கும் ஒரு பாரிய பொறுப்பு ஒன்று இருக்கின்றது. இந்த காலகட்டத்தில்

எவ்வாறு அடிப்படை சேவையில் ஈடுபடுவது, அதற்குரிய வளங்களை எப்படி பாதுகாப்பது, இந்த சபையை எப்படி கொண்டு செல்வது என்று பாரிய சவால் இருக்கின்றது. நீங்கள் எல்லோரும் அறிவீர்கள் அதை உள்வாங்கியவர்களாக, என்னோடு உங்களுக்கு அரசியல் ரீதியில் அல்லது வேறு ரீதியில் தனிப்பட்ட கோபங்கள் இருக்கலாம். ஆனால் அவைகளை இந்த சபைக்கு வெளியே வைத்துவிட்டு இந்த சபைக்குள் நாம் எல்லோரும் ஒரு கூட்டுக் குடும்பமாக இந்த ஊரின் நலனுக்காக செயற்பட வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை விடுத்தவனாக,

நம் எல்லோருக்கும் செயலாளரினால் 2020.09.03 ஆந் திகதி சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் கடிதம் தரப்பட்டது. தயவு செய்து கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் அதை கொடுத்து முடிப்பது உகந்தது. இல்லாவிடில் அரசாங்கத்தினால் நமது கொடுப்பனவுகளை இடைநிறுத்தும் செயல்கள் முதலும் நடைபெற்றிருக்கின்றது. மீண்டும் நடைபெறலாம். இந்தக் காலத்தில் JICA RIDEP திட்டத்தில் மாகாண சபை சிரேஷ்ட பொறியியலாளர் மாகாண திட்ட பணிப்பாளருக்கு இதன் நிலையைப் பற்றி நான் ஒரு கடிதம் அனுப்பி இருந்தேன். அதற்கு அவரின் மறுமொழி தங்களின் பிரதேச சபை JICA திட்டத்தினால் வழங்கப்பட்ட திட்ட வரைபில் வெட்டுப் புள்ளிக்கு கீழ் காணப்படுகின்றது. மேலும் மாகாண சபையில் தொடர்ச்சியாக நடைபெற்ற மாகாண வழிநடத்தல் கூட்ட கலந்தாலோசனையின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக தற்போதய நிலையில் இவ் வீதிகளை எமது திட்ட வரைபில் உள்வாங்க முடியாத நிலை காணப்படுகின்றது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

இது உண்மையாக ஒரு துரதிஸ்டவசமான விடயம். இத் திட்டத்தை நம்பி பல திட்டங்களில் இப் பாதைகள் உள்வாங்கப்படுவதை தடுத்து வந்திருக்கின்றோம். இன்று எமக்கு இவை இல்லாமலாகும் நிலை ஏற்பட்டுள்ளது. நிந்தவூரில் சென்ற வருடம் நடந்த கூட்டத்தில் 03வது கட்டத்தில் சம்மாந்துறை உள்வாங்கப்படும் என்று கூறியவர்கள், இன்று நாம் வெட்டுப்புள்ளிக்கு கீழ் காணப்படுகின்றது என்று கூறுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. என்னைப் பொருத்தமட்டில் நான் இந்த சபையின் கருத்தாக அதில் உள்வாங்கப்பட்ட பகுதிகள் சென்னல் கிராமம், வளத்தாப்பிட்டி இரண்டு பகுதிகளிலும் பெரும்பாலான மக்கள் சமுர்த்தி லாபிகள். இது மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும். இப் பாதைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் விடுக்க வேண்டும் என்று நான் உங்களுக்கு கூறியவனாக,

அடுத்ததாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து Purchasing of Street Lamp Item for Veeramunai என்ற தலைப்பில் ரூபா 998,400.00 ஒதுக்கப்பட்டுள்ளது. இதை இம் மாதம் 30 ஆந் திகதிக்கு முதல் இதை முடிவுக்கு கொண்டு வந்து இதற்குரிய Bill களை அமைச்சுக்கு அனுப்ப வேண்டியதாக இருக்கின்றது. இது உங்களின் தகவலுக்காக, நீங்கள் சென்ற சபையில் இந்த சபையின் நிதி நிலவரத்தைப் பற்றி கேட்டிருந்தீர்கள். இந்த வருடத்திற்கு நமது சொந்த வருமானம் 58,207,026.26 சதம் ஆகும். இக் கூட்டம் முடிந்ததும் இதனைத் தரலாம். நமது சொந்த வருமானத்தில் இருந்து ஒக்டோபர் 31 ஆந் திகதி வரை செலவளித்த தொகை 46,798,115.00 ஆகும். இரண்டிற்குமிடையில் வித்தியாசம் 11,408,910.00 இதுதான் வருமானத்தை விட எஞ்சி இருக்கும் தொகை ஆகும்.

2020.10.31 ஆந் திகதி வரை இருக்கும் தொகை ரூபா 915,588.00 ஆகும். நிலையான வைப்பில் 07 மில்லியன் இருக்கின்றது. 03 மாத Deposit 30 மில்லியன் இருக்கின்றது. மொத்தமாக 37 மில்லியன் ஆகும். அதில் 20 மில்லியன் Deposit எஞ்சிய தொகை 17 மில்லியன் Deposit இல் இருக்கின்றது. வங்கியில் இருப்பது ரூபா 915,588.00 ஆகும். இது Current Account Balance ஆகும். நாம் நவம்பர் மாத முழுச் செலவுகள், டிசம்பர் மாத சம்பள செலவுகள் அதற்கே இன்னும் 7 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை தேவைப்படும். அதற்கு மேலாக நாம் வருமானத்தை கூட்டுவதற்காக சில தீர்மானங்களை எடுத்து மேல் இருக்கும் Conference Room இனை ஒழுங்குபடுத்துவது, ஜனாதிபதி விளையாட்டு அரங்கில் Conference Hall இனை ஒழுங்குபடுத்தல் போன்ற செலவுகள் அத்தோடு நமக்கு இருக்கும் சிறு சிறு கல்வெட்கள் இவை எல்லாம் இந்த தொகைக்குள்தான் நாம் செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது. இதில் நமக்கு இருக்கும் சவால்

என்னவென்றால் நாம் அடுத்த வருடம் எதிர்பார்த்து இருக்கின்ற வருமானம் இந்த வருடத்தினால் எவ்வளவிற்கு பாதிக்கப்படும் என்பது. இன்று எமக்கு கூற முடியாத ஒரு நிலை. அந்த நிலையில் தான் நாம் இன்று இருக்கின்றோம். இதை நாம் பாதிப்பு இல்லாமல் கொண்டு செல்வது நமக்குள் கருத்து ஒருமைப்பாடு இருக்க வேண்டும். இதை மிகவும் சிக்கனமாக நாம் எதிர்காலத்தை நோக்கி ஒரு இஸ்தீரம் இல்லாத ஒரு எதிர்காலத்தில் இந்த சபையை இவ்வளவு காலமும் நாம் கட்டிக்காத்து வந்த அந்த நிலையை மாற்றாமல் அதில் பாதிப்புகள் ஏற்படுமானால் நிச்சயமாக அது எல்லோரையும் பாதிக்கும். நாளாந்த செலவுகளை நடாத்த முடியாத நிலை வருமானால் அது எல்லோரையும் பாதிக்கும். அதிலும் முக்கியமாக எம்மை நம்பி வாழும் ஊழியர்களின் குடும்பங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் ஒரு நிலையை உருவாக்கலாம்.

சென்ற சபைக் கூட்டத்தில் நமது கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் வர்த்தமானி அறிவித்தலைப் பற்றி பேசி இருந்தார். அதன் பிரதிகள் உங்களுக்கு தரப்பட்டிருக்கின்றது. இதில் முதலாவது வர்த்தமானியில் நாம் ஒத்துக்கொள்ள முடியாத சில கட்டுப்பாடுகள் இருந்தன. விதிகளில் முதலாவது விதியில் Fuel Allowance உம் அதன் பின் குறிப்பில் மாவட்டத்திற்கு வெளியே வாகனம் செல்லும் போது அந்த கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற ரீதியில் தவிசாளர்கள் ஆளுநருடன் கதைத்து நானும் ஆளுநருக்கு எழுத்து மூலம் தெரிவித்து, இரண்டாவது வர்த்தமானியில் 03 அம்சங்கள் மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்தும் அந்தக் கட்டுப்பாடு நீக்கப்படவில்லை. என்னைப் பொருத்தமட்டில் உள்ளூராட்சி சட்டத்தின் படி இது யாப்புக்கு முரணான விடயம். பிரதேச சபையின் நடவடிக்கைகளை எந்த விதத்தில் கட்டுப்படுத்தும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு இருக்க முடியாது. அந்த யாப்பின் 09வது Schedule இன் 13வது சட்டத்தின் 4ம் பகுதியில் தெளிவாக கூறப்பட்டு இருக்கின்றது. மாகாண சபைகள் பிரதேச சபைகளின் வேலைகளை கண்காணிக்கலாம். அவர்கள் இருக்கும் அதிகாரங்களை கூட்டலாமே தவிர குறைக்க முடியாது. அதை மீறிய செயலாக இருக்கின்றது. நாங்கள் மீண்டும் ஆளுநருக்கு அறிவித்து இருக்கின்றோம். இதில் நீங்கள் அறிய வேண்டிய விடயங்களும் இருக்கின்றது.

போக்குவரத்து செலவு மற்றும் அதனோடு இணைந்த கொடுப்பனவுகள், இது கௌரவ உறுப்பினர்களுக்கு பொதுவானது. உணவு மற்றும் உபசரணைச் செலவுகள், தொலைபேசிக் கொடுப்பனவு, பிரதேச சபை விசேட கூட்டங்கள் மற்றும் சட்டவாக்கு ஆலோசனைக் குழுக்கள் இந்த கொடுப்பனவை சபையினால் அதற்குரிய தீர்மானத்தை எடுக்கும் போது அதை செய்ய முடியும். இவை எல்லாம் சபையின் வருமானத்தில் இருந்து எடுப்பதாக இருக்குமே தவிர அரசாங்கம் இதற்கு மீளளிப்பு செய்ய மாட்டாது. அப்படியானால் நாம் மக்களின் பிரதிநிதிகளாக இந்த சபையின் நிதியில் இருந்து எடுக்கும் நமது கொடுப்பனவுகள் சட்டப்படி எடுக்க முடியுமானால் அதை விரும்பியவர்கள் தீர்மானங்கள் எடுக்கும் போது அந்த தீர்மானத்திற்குள் உள்வாங்கினால் சபையின் நிதி நிலையை பொறுத்து செய்யலாம் என்று கூறி, செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 300 வெளிப்புறத் திட்டமிடலில் மிருக அறுப்பு நிலையத்தில் குழாய்க்கிணறு அமைப்பதற்கான கொடுப்பனவு ரூபா 711,668.16, இக் குழாய்க் கிணறு அமைத்து முடிந்து விட்டதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது சென்ற சபையில் எடுத்த தீர்மானம் ஆகும். அது செலுத்தப்பட்டு இருக்கின்றது. அவ் இயந்திரம் வந்துள்ளது. தற்போது மஹா ஓயா பதியத்தலாவ பகுதியில் வேலை செய்து ஓரிரு கிழமைக்குள் செய்து முடிப்பதாக அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது முழுச் செலவுமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கிணற்றின் முழுச் செலவு, அதன் பின்னர் பம் போடுவது வேற செலவு ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 500 பொதுப் பயன்பாட்டுச் சேவை சபையின் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்ட 06 கொங்கிறீட் இருக்கைகள் ரூபா 25,200.00, சென்ற மாத செலவீனத்திலும் ரூபா 83,000.00 செலவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான விபரங்கள் கேட்ட போதும் இன்னும் அதற்கான விபரங்கள் கிடைக்கவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பொது இடங்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு எங்கு இருப்பிடங்கள் வைக்கப்பட்டாலும் அது சபையின் சொத்துக்களாகவே இருக்கும். அதற்குரிய விபரங்களை நிச்சயமாக உங்களுக்கு தரலாம். தற்போது இந்த செலவில் யோசிக்க வேண்டியது இந்தக் காலத்தில் நான் அவதானித்து இருக்கின்றேன். எல்லோரும் ஊரோடு அடங்கி இருப்பதனால் எல்லோருக்கும் தற்போது பொதுவாக இருந்து செய்யக்கூடிய வசதிகள் எல்லா இடமும் தேவைப்படுகின்றது. நான் அண்மையில் ஒரு Video பார்த்தேன். ஒரு இளைஞன் தோணி ஒன்று செய்து ஒரு சைக்கிளை பொருத்தி கைகாட்டி குளத்தில் வைத்து செய்தார். அழகான சூழலை உருவாக்க வேண்டிய கடமை இருக்கின்றது. ஆனால் எமக்கு இருக்கும் பிரச்சினை பணம். தற்போது ஒரு இறுக்கமான நிலைக்கு வருகின்றோம். இயலுமான இடங்களில் இவ் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது முக்கிய இடமாக கல்லரிச்சல் S – 29 வாய்க்கால் அதில் சில இடங்களில் இப்படியான வசதிகள் செய்ய வேண்டிய தேவைகள் வரலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 பொது நிர்வாகம் பிரதான காரியாலய ஜெனரேட்டருக்கான பெட்டரி கொள்வனவு ரூபா 28,852.00 அதே போன்று 600 நலன்புரி சேவைகளும், பாதுகாப்புகளும் ஜெனரேட்டருக்கான பெட்டரி கொள்வனவு அப்துல் மஜீட் மண்டபம் ரூபா 24,562.00 ஆகும். நான் நினைக்கின்றேன் பெட்டரிகளின் அளவுகளை பொருத்து வித்தியாசப்பட்டிருக்கலாம். அதனால் இவ் வித்தியாசங்கள் வந்திருக்கலாம். ஆனால் எத்தனை அம்பியர் என்று இதில் சுட்டிக்காட்டப்பட வேண்டும். என்னுடைய அறிவுக்கு ஏற்ற வகையில் இதன் வித்தியாசம் நான் நினைக்கின்றேன் 95 அம்பியர், 100 அம்பியராக இருக்கலாம். அதே போன்று 200 சுகாதார சேவைகள் முன்டயர்கள் 02 மாற்றுதல் உழவு இயந்திரம் RA – 0258 ரூபா 41,088.00 இதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கு கொடுக்கப்பட்ட விலைகள் சரியானதா? என்பதுதான் எனக்குள் இருக்கின்ற சந்தேகம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விலைமனுக்கள் ஒவ்வொன்றும் அதிலும் இந்த டயர்களில் Tender Document எல்லாம் செயலாளரின் மேற்பார்வையில் ஒழுங்காக செய்யப்படுகின்றது எனது நம்பிக்கை. அதன் விபரங்கள் தேவையானால் நானும் உங்களோடு இணைந்து இந்த வவுச்சர்களை எடுத்து பார்க்கலாம். இது Tender முறையில் 05 Quotation எடுத்து செய்தது. அதில் கூடி குறைந்து இருக்கலாம். ஆனால் அந்த நேரம் எடுக்கப்படுகின்ற Quotation இல் எது குறைந்ததோ அதில் இருந்துதான் தெரிவு செய்யப்படும். அதன் விபரங்களை பெறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, MRF டயர் ஒரு சோடி முன் டயர் ரூபா 33,000.00 இற்கு நான் கொள்வனவு செய்தேன். CEAT டயர் ரூபா 24,000.00 ஆகும். இதில் 41000.00 ரூபா என்பது அதிகமான தொகை. இதில் ரியூப் உம் சேர்க்கப்பட்டு இருந்தால் ரியூப் இற்கான விலை ரூபா 1400.00 ஆகும். எனவே இதனை கண்டிப்பாக பார்க்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 200 சுகாதார சேவைகளில் 7வது கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட கை கழுவும் இயந்திரங்களுக்கான மீதிக் கொடுப்பனவு ரூபா 176,500.00 இது 28வது அமர்வில் 7வது தீர்மானத்திற்கு அமைவாக தன்னியக்க கை கழுவும் இயந்திரம் வட்டார ரீதியாக நாம் பொருத்துவதாக தீர்மானம் எடுத்தோம். ஆனால் அந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றதா என்பதில் சந்தேகம் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எனக்கு அந்த தீர்மானத்தில் ஞாபகம் இல்லை. ஆனால் அதில் எடுக்கப்பட்டது வட்டாரங்களில் உங்களுக்கு அதை பொருத்த வேண்டிய பொதுவான இடங்கள் இருக்குமானால் அதை இனங்கண்டு பொருத்துவதாகத்தான் இருந்திருக்கலாம். உங்களுக்கு அந்த வட்டாரத்தில் அப்படியான ஒரு இடம் இருந்தும் நீங்கள் அதை இனங்கண்டு செய்யப்படாவிட்டால் அது கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம். நான் உங்களிடம் பணிவாக வேண்டிக் கொள்வது என்னவென்றால் இந்த சபையை பொருத்தமட்டில் செலவீனங்கள் எல்லாம் சபையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டதும் அதை நடைமுறைப்படுத்தும் முழுப்பொறுப்பையும் நிர்வாக ரீதியில் செயலாளர் செயற்படுத்துகின்றார்.

நான் கொடுப்பனவுக்கு வந்ததும் கேள்வி கேட்பது உண்டு. அக் கேள்விகளில் திருப்தியான பின்னர்தான் இந்த செலவீனங்களை இவ்வளவு காலமும் செய்து வந்திருக்கின்றோம். அதில் எனக்கும் சில நேரம் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் கூறியவாறு வெவ்வேறு விதமான டயர்களுக்கு வெவ்வேறு விதமான விலைகள் இருக்கலாம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் விலைமனு கோரும் போது நாம் ஒரு Brand என்று போடுவதில்லை. அதனால் சில நேரம் Market இல் இருக்கின்ற Brand தான் Quotation கொடுக்கப்படலாம். ஆனால் நாம் இனிமேல் இந்த விதத்திலும் சிந்திக்க வேண்டியது நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம். அந்தந்த துறையில் துறை சார்ந்தோர் இவ்வாறு வழிநடத்தும் போது நிச்சயமாக எதிர்காலங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தலாம்.

வருடாந்தம் சம்மாந்துறை பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் சான்றிதழ்கள் வழங்கப்படும் சேவைகள் தொடர்பிலான கட்டணம் அறிவிடல் 2021, உங்களுக்கு அந்த வர்த்தமானி தரப்பட்டிருக்கின்றது. அதில் ஏதாவது சேவையில் நாம் கட்டணங்களை கூட்ட வேண்டுமா?

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147,148,149,150, 151,152 இற்கு இந்த விலைகளை நாம் பிரகடனப்படுத்தி இருக்கின்றோம். ஆனால் அதில் ஒரு சில விடயங்களுக்கு எமது பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விலைகளை விட அதிகமாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகாரம் இருக்கின்றதா? அல்லது உப விதிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றதா? உதாரணமாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் 2500.00 போடப்பட்டுள்ளது. ஆனால் 149 இற்கு 1000.00 ரூபா, 150 இற்கு 1000.00 ரூபா, 152 இற்கு 3000.00 ரூபா கொடுப்பனவுகளை அறவீடு செய்ய முடியும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது Trade Licence, முதலில் எமது சேவைகளைப் பற்றி பேசுவோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, படம் வரைஞர்களுக்கான கட்டணம் 5000.00 ரூபா, இவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் எடுக்கின்ற தொகை தசம் மில்லியன் தொகை. ஒரு வீட்டுக்கு படம் வரைவதற்கு சென்று பார்ப்பதற்கு 5, 6 இலட்சம் என்று எடுக்கின்றார்கள். எனவே நாம் படம் வரைஞர்களுக்கான பணத்தை 5000.00 ரூபாவில் இருந்து அதிகரித்தால் என்ன என்பதுதான் எனது ஆதங்கம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் நீங்கள் சொல்வதில் ஒரு நியாயம் இருக்கின்றது. ஆனால் பட வரைஞர்களில் 03 வகை இருக்கின்றது. ஒன்று Seniors, அதன் பின்னர் இடைப்பட்டவர்கள், அடுத்தது புதிதாக Qualify பெற்று வருபவர்கள். அவர்களில் பலர் வருமானம் குறைந்த குடும்பங்களில் இருந்து வருபவர்கள். ஆனால் ஒரு துறை என்று வரும் போது அவ் விதி விலக்கை வழங்க இயலாது. பதிவுக் கட்டணம் 5000.00 ரூபா இதை மற்ற சபைகளுடன் ஒப்பிட்டு பார்த்து வேறு சபைகளில் இதை விட அதிகமாக அறவிடப்படுவது என்றால் நாம் அதை நியாயப்படுத்தலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, JCB இற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு ரூபா 3500.00 என எடுத்திருக்கின்றோம். அதற்குரிய Budget நிரலில் காட்டப்பட்டுள்ள வருமானம் உண்மையிலே JCB இற்கான போதுமான வருமானமாக இல்லை. ஆகவே JCB ஏன் எமக்கு வருமானம் ஈட்ட முடியவில்லை? ஏன் கணிசமான ஒரு தொகை அவ் வாகனத்தின் மூலம் அடைய முடியவில்லை என்பதற்கு சில நடைமுறைச் சிக்கல்கள் இருந்திருக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த தொகை கூடுதலானதா? குறைவானதா?

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, JCB வாகனத்தை பொருத்தமட்டில் இது அதிகம். ஒரு மணித்தியாலயத்திற்கான டீசல் செலவு சாதாரணமாக 450.00 ரூபா. நாம் மாதாந்த சம்பள சாரதி வைத்திருக்கின்றோம். நாம் Private வாகனம் வைத்திருந்தால் ஒரு நாளைக்கு 4000.00 – 4500.00 வரை சம்பளம் கொடுக்க வேண்டும். எனவே எமது சபையை பொருத்தவரைக்கும் சாரதிக்கு சம்பளம் கொடுக்காததினால் தொகையை குறைத்தால் எமது வாகனத்திற்கு வருமானம் அதிகமாக கிடைக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமக்கு அரசாங்க Rate ஒன்று இருக்கின்றது. சபை தீர்மானித்தால் அரசாங்க Rate இற்குதான் செய்ய வேண்டும் என்று இல்லை. நானும் அதை அவதானித்து இருக்கின்றேன். நானே சில நேரம் என்னுடைய தனிப்பட்ட வேலை செய்வதற்கு வெளியில் எடுப்பது அது இலாபம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற கிழமை நான் நினைக்கின்றேன் ஜனாசா அடக்குவதற்காக JCB வாகனத்தை கேட்ட போது Up and Down Charge உட்பட 7000.00 ரூபா, வளத்தாப்பிட்டி தூரத்திற்கு அவ் வாகனம் சென்று ஜனாசா அடக்கம் செய்து வருவதற்கு நியாயமான காசுதான். இருந்தாலும் அது கூடுதலாக இருக்கின்றது என்று நினைக்கின்றேன். எனது கருத்து 3000.00 ரூபாவாக குறைக்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மோட்டர் கிரேடர் 4000.00 ரூபாவாக மாற்றலாமா?

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மோட்டர் கிரேடர் 4000.00 ரூபாவுக்கு போகாது. எம்மிடம் இருப்பது 04 டயர். நான் 06 டயர் உள்ளது வைத்திருக்கின்றேன் அது 3500.00 ரூபாவிற்குதான் கொடுப்பது. இதனை 3500.00 ரூபாவாக மாற்றலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்துல் மஜீட் மண்டபம் 15000.00 ரூபா என்று இருக்கின்றது. அதனை கூட்டினால் என்ன? காரைதீவில் உள்ள மண்டபம் 40000.00 ஆகும். தற்போது எமக்கு வருமானம் வரக்கூடிய இடங்கள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 15000.00 ரூபாவினை கூட்டி சபைக்கு வருமானம் எடுப்பது என்றால் அப்துல் மஜீட் மண்டபத்தில் இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டிய வேலைகள் அதிகமாக இருக்கின்றது. ஏனைய ஊர்களை ஒப்பிட்டு பார்க்கும் போது இங்கு அவ் வசதி இல்லை. மணப்பெண்ணை கொண்டு வைத்தவுடன் அதற்குரிய பொருட்களை மண்டபத்தினை எடுப்பவர்கள் தேடி எடுக்க வேண்டிய நிலமை இருக்கின்றது. அங்கு இருக்கின்ற ஊழியர்கள் அதனை ஒழுங்காக கவனிக்கின்றார்கள் இல்லை. அதற்குரிய வசதிகளை செய்து கொடுத்தால் 30000.00 ரூபா எடுத்தாலும் பரவாயில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வசதிகள் என்ன என்பதை எழுதி எடுப்போம். இதனை எவ்வளவு கூட்டலாம்?

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, AC பொருத்தலாமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
AC பொருத்துவது என்றால் தற்போது இருக்கின்ற உயரத்தை குறைக்க வேண்டும். இதனை 20000.00 ரூபாவாக மாற்றுவோம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Ton Roller தொடர்ந்து வேலை செய்வதில்லை. ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலயம், இரண்டு மணித்தியாலயம் என்றுதான் வேலை செய்யும். அதற்கு மேல் வேலை செய்ய இயலாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை எவ்வளவுக்கு மாற்றலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, RDT இன் Rate Per day இற்கு 5000.00 ரூபா ஆகும். ஆனால் Transport உரியவர்கள் எடுத்து வரவேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்தது Trade licence இதில் ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டுமா?

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 41 கருங்கல் குவாரி ஒன்றைப் பேணுதல், 42 கருங்கல் தூளாக்கும் இயந்திரத்தை வைத்திருத்தல் இதை அதிகரிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 56, 58 அதனை கூட்டலாம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 29 இனை கூட்ட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Act இல் எந்த தடையும் இல்லாவிட்டால் செய்யலாம்

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Act இல் இது சம்மந்தமாக குறிப்பிடப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 79 தனியார் கல்வி நிலையம், பயிற்சி நிலையம். சபை தீர்மானத்தின் படி இங்கு போடப்பட்டிருக்கின்ற பெறுமதிகள் அதிகரிக்க முடியுமாக இருந்தால் அவ்வாறான செயற்பாடுகளை அதிகரிக்க வேண்டும். எமது ஊரைப் பொருத்தவரையில் தனியார் கல்வி நிறுவனங்கள் எத்தனையோ இருக்கின்றது. ஆனால் சட்டபூர்வமாக வகுப்புகளை நடாத்தக் கூடிய எந்த விதமான ஒரு நடைமுறையோ, செயற்பாடோ இல்லாமல் இருக்கும் போது அவர்களுக்கு அனுமதி வழங்குகின்றோம். ஆகவே இவ் அனுமதிப்பத்திரம் நாம் வழங்குவதாக இருந்தால் அதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதே போன்று அதன் பெறுமானத்தை அதிகரிக்க வேண்டும் என்று கௌரவ உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 118 ஆபரணங்கள் தயாரித்தல் அதனை கூட்ட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 115 அஸ்போல்ட்ப்லான்ட் ஒன்றை பேணுதல்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 111 மரம் அறுக்கும் ஆலை.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 125 அடகுபிடித்தல் தொழில் நிலையம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 180 சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு அலுவலகம் ஒன்றை பேணுதல்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவைகளை செயலாளருடன் இணைந்து ஏனைய சபைகளுடன் ஒப்பிட்டு பார்த்து உங்கள் எல்லோருக்கும் Circulate செய்து ஒரு முடிவு எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது புதிதாக Solar Power பொருத்தப்படுகின்றது. அதனை உள்வாங்க இயலாதா?

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வருமானத்தை முன்னோக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக செல்வந்தர்கள் மாதாந்த வருமானமாக செய்து கொண்டிருக்கின்றார்கள். அதனை உள்வாங்கி செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Solar Power என்பது நாட்டின் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்ற ஒரு நடவடிக்கையாக இருப்பதால் அதற்கு வரி விதிப்பதைப் பற்றி மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற சபையில் நான் கூறியிருந்தேன் சபையின் Electricity Supply இனை கூட்டுவதற்கு தற்போது Estimate வந்திருக்கின்றது. 95KVA, 03 Phase. இதில் 03 Phase தருகின்ற போது 60A தான் ஒரு கட்டடத்திற்கு செய்வது. அதற்கு மேல் தேவை என்றால் அருகில் உள்ள Transformer இல் இருந்து தருவார்கள். இல்லாவிட்டால் Transformer போட்டு செய்வார்கள். ஆனால் நமக்கு அருகில் இல்லாத படியினால் அவர்கள் மதிப்பீடு ஒன்று அனுப்பியிருக்கின்றார்கள் Capital Contribution ரூபா 710,900.00, Deposit ரூபா 118,000.00, Application Fee ரூபா 2000.00 ஆகும். இதை எடுத்தால்தான் AC கூட்டுவது என்றாலும், Lift, Digital Board மூன்றுக்கும் நமக்கு Power கூடுதலாக தேவை. அடுத்தது எதிர்காலத்தின் தேவைகளுக்கும், CEB இற்கு இந்த பணத்தை செலுத்துவதற்கு உங்களின் அனுமதியை கேட்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சில ஆலைகளை தொடங்குவதற்கு அரசாங்கத்தில் ஒரு சட்டம் இருக்கின்றது ஊக்குவிப்பாக Transformer அவர்களே செய்து கொடுக்கின்ற மாதிரி

சம்மாந்துறையில் எத்தனை Transformer இருக்கின்றது, எத்தனை தூண் இருக்கின்றது எத்தனை கோடி ரூபா ஒரு மாதத்தில் CEB உழைத்துக் கொண்டு போகின்றார்கள். எங்களுக்காக CEB ஒரு Transformer போட்டு இந்த சேவையை செய்வதற்கு ஏன் AGM இடம் கேட்க இயலாது. இந்த சபையின் வருமானத்தை ஊக்குவிப்பதற்காகத்தான் நாம் இந்த Digital Board இனை கொண்டு வந்தோம். அது சம்மந்தமாக Transformer ஒன்றை 07 இலட்சத்திற்கு CEB இன் சிபார்சின் பெயரில் கட்டாயம் தர வேண்டும். எங்களது அரச ஆதரவாளர் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் அவர்கள் ஊடாக கேட்கலாம். 07 இலட்சம் என்பது தற்போது பெரிய தொகை. அதை கொடுக்க இயலாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு காலத்தில் பிரதேச சபைகள், பட்டின சபைகள் தான் Electricity Distribution செய்தது. அது மாறியவுடன் தேசிய ரீதியில் தேசிய ரீதியில் CEB Act வந்தவுடன் இவைகள் வெளியிறங்கி அவர்களின் சட்டதிட்டங்களுக்குள் செய்ய வேண்டுமே தவிர நாம் செய்ய இயலாது. ஆனால் நாம் வேண்டுகோள் விடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற கூட்டத்தில் இவ்விடயம் சம்மந்தமாக முன்மொழிவு செய்த போது ஒரு கேள்வியை நான் கேட்டேன். அதாவது Transformer இற்கு நாம் கொடுப்பனவு செய்ய வேண்டி வருமா என்று, அதற்கு அச் சந்தர்ப்பத்தில் நீங்கள் கூறிய விடயம் இல்லை அதற்கு கொடுப்பனவு செய்யவேண்டி வராது என்று கூறினீர்கள். தற்போது 07 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் அவ் வேலை தொடங்கி பாரிய அளவில் வந்ததனால் இடையில் நிற்கின்றோம். இதனை குறைத்து மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை கேட்டு அதற்குள் செய்வது சிறந்தது என் நான் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, என் பதிலை சரியாக பார்த்தால்; நான் கூறினேன் முழுமையாக கொடுக்க தேவையில்லை. ஆனால் இன்னும் அந்த Estimate வரவில்லை வந்தவுடன் சபையில் அனுமதியை பெறுவேன் என்று, இதை பார்த்தால் Being Capital Contribution நான் இதை வாதிட்டேன் DGM வரை கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியதைவிட வித்தியாசமாக நீங்கள் இதை செய்கின்றீர்கள் நாங்கள் எல்லாவிதத்திலும் உதவுகின்றோம் என்று அதற்கு அவர்கள் நாங்கள் General Manager இடம் சென்றாலும் அதற்கு ஒரு விதிவிலக்கு வராது. இது முழுத்தொகை வருவது என்றால் கிட்டத்தட்ட 2 மில்லியன் தேவைப்படும். நான் முயற்சி ஒன்று எடுப்பேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த Transformer தேவைப்படுவது எமது Digital Board இற்காகவா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதுமட்டுமல்ல தற்போது இருப்பது 60A Supplier இன்றைக்கு சபைக்கூட்டம் கூடுகின்ற போது Ac எல்லாம் போட்டவுடன் அதிகபட்சத்தில் இருக்கின்றது. Conference Room இனை Air Condition செய்வது என்றால் Power போதாது. 60A இற்கு மேல் இன்னும் 60A எடுக்க இயலாது, 30A உம் எடுக்க இயலாது Bulk Supply தான் எடுக்கலாம். இது உண்மையாக ஆரம்பத்திலேயே Bulk Supply எடுத்திருக்க வேண்டும். Digital Board இயக்கும் போதுதான் இந்த தேவை உண்மையாக உணர்த்தப்பட்டது. Digital Board விடயத்தில் நாம் சட்டபூர்வமாக அந்த Supplier இற்கு Letter of Demand அனுப்பினோம். அவர் அதற்கு பதில் சட்டத்தரணி மூலமாக ஏற்றுக் கொண்டு ஜனவரி மாதம் 2021 இற்கு முதல் அதை பூர்த்தி செய்வதாக சட்டத்தரணி மூலம் அறிவித்திருக்கின்றார்.

நமது சட்டத்தரணி கூறுகின்றார் தற்போதும் வழக்கு போடலாம். ஆனால் ஜனவரி மாதத்தில் தான் எடுக்கப்படும். ஜனவரி மாதம் வரை இருந்துவிட்டு ஜனவரியில் வழக்கு செய்வோம் என்று எமக்கு எழுத்து மூலம் அறிவுரை தந்திருக்கின்றார்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு விடயத்தை தெளிவு படுத்த வேண்டும் அதாவது கடந்த கூட்டத்தில் Transformer சம்மந்தமாக, மீண்டும் ஒரு தெளிவு Digital Board சம்மந்தமாக, Digital Board இற்கு போதியளவு மின்சாரம் இல்லாமையினால் Transformer வைக்க வேண்டி வரும் என்று கூறினீர்கள். இந்த Transformer இற்கான கொடுப்பனவு யார் செய்வது? என்று கேட்டேன் அதற்கு நீங்கள் Transformer இற்கான முழுக் கொடுப்பனவும் சபை செய்வதல்ல. Transformer CEB இனால் வைக்கப்படும். வேலைகளுக்கான கொடுப்பனவுகள் சபை மூலமாக செய்ய வேண்டும். இதற்கு மட்டுமல்ல எமது Lift பொருத்துகின்ற நேரமும் இந்த Power தேவைப்படும். இரண்டினையும் கருதித்தான் அந்த Application போட்டிருக்கின்றோம். அது இரண்டுக்கும் தற்போது இருப்பது காணாது என்று கூறினீர்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதைத்தான் சொன்னேன் முழு கொடுப்பனவும் நாம் கொடுக்க வேண்டி வராது.

## தீர்மானம் - 04/33/01

1987 ஆம் ஆண்டில் 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (I) ஆவது உப பிரிவினால் சம்மாந்துறை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சம்மாந்துறை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் முன்னேற்றப்பட்ட பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்திருக்கும் சகல வீடுகளின், கட்டடங்களின், காணிகளின் வருடாந்த பெறுமதிக்காக 2020 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1) மற்றும் (2) ஆம் உப பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அந்தச் சொத்துக்களுக்கான மேற்குறித்த வரி மதிப்பீட்டிற்கு வருடாந்த பெறுமதியில் இருந்து (7%) ஏழு வீதம் அறவிடப்பட வேண்டும் என பிரேரிக்கின்றேன்.

மேலும் 2021 ஆம் ஆண்டின் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு காலாண்டிற்காக அதற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் விதிக்கப்பட்ட வருடாந்த வரிப்பணத்தை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு வருடாந்த வரிப்பணத்தை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தினால் வருடாந்த வரியிலிருந்து நூற்றுக்கு பத்து (10%) வீத வரி தள்ளுபடியும், அந்த உப ஆவணத்தில் ஒவ்வொரு காலாண்டிற்கு முன்னால் மூன்றாவது வரிசையில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வரிப்பணம் பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்தப்படுமானால் அந்த காலாண்டிற்குரிய வரிப்பணத்திலிருந்து நூற்றுக்கு (5%) வீத வரி தள்ளுபடியும், பிரதேச சபையினால் வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.

வரிப்பணத்தை ஒவ்வொரு காலாண்டுக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில் அந்தப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக வெளிப்படுகின்ற உத்தரவுப்பத்திரத்தின் பிரகாரம் ஆதனவரி அறவீடுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியுள்ள வரியில் இருந்து நூற்றுக்கு பத்து (10%) வீதம் மிகைக்கட்டணம் அறவிடுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/02**

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147, 148, 149, 150, 151, 152 ஆகிய பிரிவுகளின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் படி, 2021 ஆம் வருடத்தின் பொருட்டு குறிப்பிடப்பட்ட வியாபாரங்களிலிருந்து உரிமைக் கட்டணமும் அல்லது வரியும் விளம்பரக் கட்டணமும் சம்மாந்துறை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் 2021 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து விதித்து அறவீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 1 ஆந் திகதிக்கு முதல் செலுத்துவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/03**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினால் பிரதேச சபை மீது சுமத்தப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் சம்மாந்துறை பிரதேச சபையினால் பின்வரும் அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டு இருக்கும் சான்றிதழ் ஒன்றை அல்லது சேவை ஒன்றை வழங்கல் தொடர்பில் குறித்த அட்டவணையின் நிரல் II இல் குறித்த சான்றிதழ் அல்லது சேவையை வழங்கல் தொடர்பில் குறிப்பிடப்பட்டு இருக்கும் கட்டணத்தை 2021 ஆம் வருடம் தொடர்பில் விதித்து அறவிட வேண்டும் எனவும் குறித்த சேவையை அல்லது சான்றிதழை பெறுபவரால் குறித்த சேவையை அல்லது சான்றிதழை பெறமுன் அக்கட்டணத்தை சம்மாந்துறை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/04**

சம்மாந்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட பல்வேறு வாகனங்கள், இயந்திரோபகரணங்களுக்காக II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட கட்டணத்தை 2021 ஆம் வருடத்திற்காக நிர்ணயம் செய்து அறவீடு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/05**

சென்ற மாதம் 2020.10.01 தொடக்கம் 2020.10.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/06**

கௌரவ உறுப்பினர் I.L.M.மாஹிர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தரமுடியாதென்று அறிவித்தல் விடுத்திருப்பதால் அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வரவு செலவு மதிப்பீடுகள் தொடர்பாக ஒரு செயலமர்வு ஏற்பாடு செய்திருந்தோம். துரதிஸ்டவசமாக சில கௌரவ உறுப்பினர்கள் அதில் பங்கு கொள்ளவில்லை. சட்டத்தின் விளக்கம் குறைவாக இருக்கலாம். ஆனால் அது ஒரு ஆக்கபூர்வமான ஒரு அமர்வாக இருந்தது. அங்கு பேசப்பட்ட விடயங்களும் கௌரவ உறுப்பினர்களின் பங்களிப்போடும், ஊழியர்களின் பங்களிப்போடும் மிகவும் ஒரு இக்கட்டான நிலையில் இந்த வருமான மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது. இதில் ஒரு புது அம்சம் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. அதை நான் உங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் தற்போது வரவு செலவு திட்டத்தினை முன்வைக்கின்றீர்களா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஆம்

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்கு முதல் நாங்கள் கடந்த 31ம் திகதி நடைபெற்ற கூட்டத்திற்கு நீங்கள் பதில் ஒன்று அனுப்பி இருந்தீர்கள். நாங்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்ட விடயம் என்னவென்றால் அக் கலந்துரையாடலை முதலாம் கட்டமாக எமது உறுப்பினர்கள் மாத்திரம் கடந்த வருடம் அதே ஜனாதிபதி மண்டபத்திலே இடம் பெற்றது. அந்த அடிப்படையிலே நாம் பேசிவிட்டு மீண்டும் பொது அமைப்புகளோடு ஒன்று சேருவோம் என்று, உதாரணமாக வரவு செலவு திட்டத்தினை தயாரிப்பது சம்பந்தமாக 4ம் மாதத்தில் இருந்து அதற்கான கடமைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையிலே பிரதேச சபையின் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையிலே முதலாம் கட்டமாக ஏப்ரல் 1 இல் தொடங்கி ஒவ்வொரு கட்டம் கட்டமாக பிரதேச சபையின் முதலாவது உள்ளுராட்சி மன்றத்தின் பிரிவுத் தலைவர்களின் ஆலோசனைகள் பெறுதல், பொது அமைப்புகளின் ஆலோசனைகளை பெறுதல், உள்ளுராட்சி மன்ற பிரதிநிதிகளின் ஆலோசனைகளை பெறுதல் பின்னர் நிபுணர்களுடன் பொதுவாக கலந்துரையாடி இறுதி சபைக்கு சமர்பிப்பது சம்பந்தமாக எமக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றது.

இந்த கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நீங்கள் 31ஆந் திகதி இப்படி ஒன்றுகூடல் ஒன்று நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம். அந்த இடத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டிருந்தீர்கள். நாங்கள் அவ் இடத்திற்கு செல்வதற்கு முன்னர் நமக்குள் ஒரு உடன்பாடு ஏற்றப்படுதல் வேண்டும். அந்த உடன்பாடு ஏற்றிய பின்னர் அது இரண்டாம் கட்டமாக செல்ல வேண்டும் என்பது எங்களது கோரிக்கையாக இருந்தது. ஆகவே தான் அந்த இடத்தில் வந்து கருத்து கூற சிலவேளை நீங்களும் சங்கடப்பட வேண்டி வரும் நாங்களும் சங்கடப்பட வேண்டி வரும். அதனைத் தவிர்த்து நாம் ஒட்டுமொத்த முடிவுக்கு சென்று விட்டு போகலாம் என்ற தொனியிலே தான் எங்களது வேண்டுகோளை விடுத்திருந்தோம். ஆகவே இது எங்களது தவறான கண்ணோட்டம் அல்ல எதிர் வரும் காலத்திலாவது தவிசாளர் அவர்களே, இந்த ஒழுங்கை நாங்கள் சபைக்குள் வந்து என்னை நம்புவதை விட நாங்கள் உங்களை நம்புகின்றோம். அதற்கு எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆகவே நாங்கள் உங்களிடம் இருந்து பிரதேச சபை இப்படித்தான் நடக்கப்பட வேண்டும் என்று படித்துக் கொள்ளவும் விரும்புகின்றோம். அந்தக் கட்டமைப்பின் ஊடாக இது செயற்படுத்தப்பட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. எனவே எதிர்வரும் காலங்களிலாவது இவ்வாறான இந்த செயற்பாடுகள் ஏற்படாமல் நாம் கடந்த காலம் செய்தோம். ஒன்று கூடி பேசினோம். ஒரு சாப்பாட்டை அந்த இடத்தில் ஒன்றாக சாப்பிட்டோம். ஆகவே அவ்வாறான ஒரு நிலைக்கு சென்றுவிட்டு அடுத்த கட்டத்திற்கு செல்வது வழமை. அதற்கு முதல் நாம் நகர மண்டபத்திலே ஒன்று கூடி பேசினோம். இவ்வாறு பல இடங்களில் பேசிய பின்னர்தான் இறுதிக் கட்டத்திற்கு சென்றோம். எனவே அவ்வாறான ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட வேண்டும். அது மாறப்படாது. அது உறுப்பினர்களின் ஒரு சிறப்புரிமையாகவே நாங்கள் கருதுகின்றோம். அதனையே ஒரு சுட்டிக்காட்டி இருந்தோம் என்பதை எத்தி வைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் அவர்களே, உங்களின் கருத்துக்கள் எழுத்தில் போட்டது போல், நானும் உங்களுக்கு அதற்கு பதில் அனுப்பி இருந்தேன். கௌரவ உப தவிசாளர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் சம்மாந்துறை பிரதேச சபையின் வரவு செலவு தயாரிப்பு முந்திய சபையின் முதன் முதலாக மக்கள் பங்களிப்போடு, அங்கத்தவர்களின் பங்களிப்போடு விஞ்ஞான பூர்வமாக ஊழியர்களின், ஒவ்வொரு Department Budget உம் எடுத்துத் தயாரிக்க தொடங்கியது முதன் முதல் தடவையாக சம்மாந்துறை பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் ஆகும். உண்மையாக கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் கூறியவாறு ஒரு வரவு செலவுத் திட்ட தயாரிப்பு ஏப்ரல் மாதம் முடிந்து ஆரம்பிக்க வேண்டும். அதற்கு ஏற்ற மாதிரி செய்து நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் இந்த வருடம் மார்ச் மாதம் 16ம் திகதியிலிருந்து இந்த நாட்டின் வழமையான நிலமை இல்லை. நாம் கூடக்கூடியதோ, மக்களை கூட்டக்கூடியதோ இல்லாமல் தான் எதிர்காலத்தை நமக்கு நிச்சயப்படுத்த முடியாத ஒரு சந்தர்பத்தில் தான் நாம் போய் கொண்டிருந்தோம். ஆனால் இதை செய்ய வேண்டும், உங்களின் கருத்துக்கள் எனக்கு மிகவும் முக்கியமானது, இந்த சபைக்கும் முக்கியமானது.

நாம் எல்லோரும் இந்த சபையை பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதற்காகத்தான் நான் 09ம் மாதம் நடந்த 31வது சபையிலேயே நான் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி கதைத்து 2019 ஆம் ஆண்டின் செலவுகளை மட்டும் போட்டு ஒரு Draft ஒன்று வழங்கி உங்களது கருத்துக்களை கூறுங்கள் என்று, அதன் பின்னர் 32வது அமர்விலும் நான் முழுமையாக ஒரு Draft ஒன்று சபையில் தீர்மானித்து தந்தேன் கருத்துக்களை கூறுங்கள் என்று, அந்தக் காலத்தில் நமக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், அரசியல் பிரிவினைகளால், நாட்டு சூழ்நிலைகளினாலும் வழமையாக நடப்பது நடக்காமல் போய்விட்டது. உண்மையாக இந்த சபையின் வரவு செலவுத் திட்டம், இந்த சபையின் Annual Report எல்லாவற்றிலும் அக்கரை காட்டுவதற்கு முதல் காரணம் ஒவ்வொரு விடயத்திலும் பொறுப்பு கூறலில் இந்த சபை மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும் ஒரு முன்னுதாரணம். அக் கலந்துரையாடலில் கூறப்பட்டது இன்றும் சில சபைகள் Cut and Paste. இது ஒவ்வொரு Department Head உம் அதனை பூர்த்தி செய்து அதற்கு பின்னர் ஒவ்வொரு வருமானத்திற்கும், ஒவ்வொரு செலவிற்கும் ஒரு நியாயப்படுத்தல் இருக்க வேண்டும்.

ஒருவர் ஏன் நீங்கள் இவ்வளவு போட்டிருக்கின்றீர்கள் என்று கேள்வி கேட்டால் நமக்கு ஒரு விளக்கம் இருக்க வேண்டும். Cut and Paste செய்ய இயலாது. நான் இந்த சபையின் சின்னம் எனக்கு போசாக்கு தருவது நீங்கள். எனக்கு என்ன கௌரவம் வருகின்றதோ அதுதான் இந்த சபைக்கும் வருவது. அந்த கௌரவத்தில் எந்த இழுக்கும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு பொறுமையோடு செய்வது. இந்த சபை நமது காலத்தில் ஒரு பெருமையாக ஒற்றுமையோடு மக்களின் சேவையின் எண்ணத்தோடு செயற்படும் சபையாக இருக்க வேண்டும். இதில் எந்த ஒளிவு மறைவும் இருக்க தேவையில்லை. நாம் எல்லோரும் மனிதர்கள் பிழைகள் நடக்கலாம். பிழைகள் செய்யும் போது அப் பிழைகளை சுட்டிக்காட்டுகின்ற முறையில் உண்மையாக இந்த சபையின் விதிகளை பார்த்தால் பழைய விடயங்களைப்பற்றி நீங்கள் கேள்வி கேட்பது என்றால் எழுத்தில் தர வேண்டும். எழும்பி கேட்க இயலாது. தவிசாளரின் கட்டளைக்கு

அடிபணியாவிட்டால் சபையில் இருந்து வெளியேற்றுவதற்கு தவிசாளருக்கு அங்கீகாரம் இருக்கின்றது. ஆனால் இந்த அதிகாரங்களையோ அல்லது எதையோ நான் ஒரு நாளும் பாவித்ததில்லை.

கடந்த 02 அமர்வுகளிலும் நான் மிகவும் வேதனைப்பட்டேன். இந்த ஊரின் சேவைக்காக செய்யும் போது நானும் சாதாரண ஒருவராக இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சினை வந்திருக்காது. நான் என்னுடைய வாழ்க்கையில் ஒருவரையும் எதிரியாக பார்த்ததில்லை. இறைவன் என்னை எப்போது யாரிடம் அனுப்புவான் என்று எனக்கு தெரியாது. உங்களோடு உடன்பட மாட்டேன். அது வேறு விடயம். ஆனால் எதிரியாக பார்த்து அவருக்கு செய்யக்கூடாது இவருக்கு செய்யக்கூடாது என்று நான் செயற்படுவதில்லை. இவ் வரவு செலவுத் திட்டம் வழமை போல் நடந்திருந்தால் நீங்கள் கூறியவாறு எல்லாம் நடைபெற்று இருக்கும். ஆனால் அசாதாரண சூழ்நிலையிலும் உங்களின் பங்களிப்பு வேண்டும் என்பதற்காகத்தான் நான் 02 சபைகளிலும் கூறி இனிமேலும் தாமதமாக்க முடியாது வெளிநிபுணர்களின் கருத்துகள் உள்வாங்கப்பட வேண்டும் என்று, உண்மையாக அந்த அமர்வு மிகவும் வித்தியாசமான ஒரு அமர்வு. மனம் விட்டு அவர்களும் அவர்களுக்கு பிரதேச சபையின் நடவடிக்கைகளில் இருந்த சந்தேகங்களை அறிந்து இனிமேல் எதிர்காலங்களிலும் நம்மோடு சேர்ந்து வருவதற்கு பல நிபுணர்கள் உறுதி மொழி வழங்கினார்கள். அதை வைத்துதான் இந்த வரவு செலவுத்திட்டம் வரையப்பட்டு இருக்கின்றது.

பொது நிர்வாகத்தில் வீத வாடகை வரிகளை பார்த்தால் 2020 இற்குரிய மதிப்பீடு 8.6 மில்லியன். 2021 இற்கான மதிப்பீடு 10,600,000.00 ரூபா ஆகும். இதற்கு காரணம் கௌரவ உறுப்பினர்களின் கலந்துரையாடலில் அபிவிருத்தி செய்யப்படாத புரணாக இருக்கும் காணிகளுக்கு வரி விதித்தல். அதற்குரிய துணை விதிகளை முதல் 03 மாதங்களுக்குள் உருவாக்கி அதன் அங்கீகாரத்தை பெற்று சட்டத்தில் இருக்கின்ற அதிகாரங்களை பாவிக்கலாம். நீதிமன்றத்திற்கு சென்றால்தான் By Law தேவைப்படும். அந்த By Law வையும் தயாரித்து 2021ம் ஆண்டில் புரணாக இருக்கும் வளவுகளுக்கு வரிகள் விதிப்பதாக ஒரு உத்தேச கணக்காக 02 மில்லியன் கூட்டப்பட்டு இருக்கின்றது.அதை விட மற்றவை எல்லாம் உண்மையாக எமக்கு இருக்கும் முக்கியமான வருமானங்கள் குற்றப்பணங்களும், முத்திரை தீர்வும் ஏறத்தாள இந்த வருடத்தின் மதிப்பீட்டையோ வைத்திருக்கின்றோம். உண்மையாக அது எப்படி வரும் என்று எமக்கு கூற முடியாத ஒரு நிலை.

Back Hoe, Motor Grader, Road Rollers எல்லாவற்றுக்கும் 2020 இல் பார்த்தால் 09 மாதத்தின் வருமானம் இல்லை. காரணம் அசாதாரண சூழ்நிலையால் அது நடைபெறவில்லை. எமது Trade இலும் பிரச்சினை இருந்தது. இறைவனின் நாட்டப்படி அடுத்த வருடத்திலாவது நமது சூழல்கள் மாறுமானால் நிச்சயமாக தற்போதய அரசு கிராமிய அபிவிருத்தியில் எப்போதும் அக்கறை காட்டுவது. அந்த அபிவிருத்தி மூலம் இதை அடையலாம் என்ற ஒரு நோக்கத்தில் அந்த வருமானங்கள் காட்டப்பட்டுள்ளது. சந்தைக் கடைகள், இறைச்சிக் கடைகள் குத்தகை எமக்கு இருக்கும் பெரிய சவால். இது கேள்விக்குறிக்குள்ளாக்கப்படுமானால் நாம் எதிர்பார்க்கின்ற 15 மில்லியன் இல்லாமலாகலாம். அந்த ஆபத்தை தவிர முக்கிய வருமான தளங்களாக விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, அப்துல் மஜீட் மண்டபம், வரிகள்.

வரி அறவிடுவதில் நான் சென்ற வருடமும் கூறினேன் நாம் எல்லோரும் இதில் ஈடுபடுவோமானால், கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் அடிக்கடி குற்றம் கூறுவார் நாம் சொல்லுகின்றோம், அதை செய்கின்றோம் இல்லை என்று, அதை நாம் எல்லோரும் முன் நின்று செய்ய வேண்டும். மதிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 182,797,846.00 ஆகும். அதே போல் மீண்டு வரும் செலவீனங்களில் ஒரு பாரிய சவால் என்னவென்றால் நமது நிரந்தரம் இல்லாத ஊழியர்கள் 180 நாள் திட்டத்தின் கீழ் அடுத்த வருடம் 03ம் அல்லது 04ம் மாதத்திற்கு முன் உள்வாங்கப்படாவிட்டால் நமக்கு 10, 11 மில்லியன் மேலதிகமான செலவீனங்கள் வரலாம். அப்படி வருகின்ற போது நாம் அபிவிருத்திக்கான செலவீனங்களை குறைக்க வேண்டி ஏற்படலாம். அல்லது ஊழியர்களை நிறுத்த வேண்டும்.

இந்த வரவு செலவு திட்டத்தில் 5வது மாதத்திற்கு நிரந்தரம் இல்லாத ஊழியர்களில் 180 நாள் திட்டத்தில் உள்வாங்கக்கூடிய 54 ஊழியர்களின் சம்பளங்கள் 5ம் மாதத்தில் இருந்து நிரந்தர ஊழியர்களின் சம்பளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதுதான் 09 மில்லியன் 07 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது. இதுதான் இந்த வரவு செலவு திட்டத்தில் நமக்கு பாரிய அழுத்தத்தை தரக்கூடியது. செலவீனங்களில் அலுவலக தளபாடம், கணனி, வாகனம், உபகரணம் என்று 3.5 மில்லியன் காட்டப்பட்டுள்ளது. இதற்கு காரணம் நமது Conference Hall அதற்கு பொருத்தமான தளபாடங்கள் கொள்வனவு செய்து, Air Condition, Curtain போடுவதற்கு இந்த வருடம் செலவளிக்க கூடியதை செய்தோம். மீதியாக ஒரு வருமானம் வரக்கூடிய ஒரு நிலையை கொண்டு வருவதற்கு செய்வது ஆகும். இந்த வரவு செலவு திட்டத்தை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். இதில் ஏதாவது கருத்துக்கள் முன்வைக்க வேண்டுமானால் இந்த விடயத்தைப் பற்றி பேசலாம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வரவு செலவுத் திட்டம், அதற்கு முந்திய வரவு செலவுத் திட்டத்தின் போது நாங்கள் நிச்சயமாக எந்தவொரு தெளிவுபடுத்தல்களும் கோரவில்லை. ஏனெனில் நீங்கள் அந்த இடத்தில் இருப்பது நாங்கள் அந்த இடத்தில் இருப்பதாகவே கருதுகின்றோம். ஆகவே அந்த அடிப்படையிலே நாங்கள் கேட்கவில்லை. ஆனால் இதில் தெளிவு படுத்தல்கள் அவசியமாக இருக்கின்றது. அந்த அடிப்படையிலே நாங்கள் தெளிவுபடுத்தல்களை கோரலாம் என ஆரம்பத்திலே கூறிவிட்டீர்கள். இது சபையை இடையூறுபடுத்துவது அல்ல சபையை கொண்டு செல்லவே கேட்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் இடையூறு படுத்துவதாக சொல்லவில்லை. கேள்விகள் கேட்கலாம், பதில்கள் தரப்படும். நான் ஒரு காலமும் எந்த கேள்விகளுக்குமோ, தெளிவுபடுத்தலுக்குமோ குறுக்காக இருக்கவில்லை. ஆனால் சென்ற காலங்களைப் போல் மீண்டும் கூட்டறிக்கையில் வருவதற்காக பேசுவதற்கு இடமளிப்பதில் அர்த்தம் இல்லை. நீங்கள் கேள்விகள் கேளுங்கள் அதற்கு நான் பதில் தருவேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
நிச்சயமாக கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 2019 ஆம் ஆண்டு நாம் தயாரித்த வரவு செலவானது ரூபா 109,074,746.86 ஆகும். 2020 ஆம் ஆண்டு ஒரே தடவையில் ரூபா 211,045,048.00 மதிப்பீடு செய்திருக்கின்றோம். இடையில் ஏற்பட்ட கொரோனா காரணமாக நமது வருமானம் குறைந்திருக்கின்றது. அதாவது 10 கோடி கூடுதலாக மதிப்பீடு செய்திருந்தோம். தற்போதும் ரூபா 182,797,846.00 மதிப்பீடு செய்திருக்கின்றோம். ஏறத்தாள 2019 வருமானத்தை விட 08 கோடி மேலதிகமான ஒரு வரவினை காட்டி வரவு செலவினை தயாரித்திருக்கின்றோம். அந்த அடிப்படையிலே பொது நிர்வாகத்திற்குள் வட்டி சேமிப்பு கணக்கு உட்பட 1,700,000.00 வரவாக வந்திருக்கின்றது. இந்த வருட ஆரம்பமாக நமது நிலையான வைப்பு 17 இலட்சத்தை சுட்டிக்காட்டி இருக்கின்றீர்கள். கடந்த வருடமும் அது சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. அதனைப் போன்று பணியார் கடன் வட்டி 2019 இல் ரூபா 122,097.89 வந்திருக்கின்றது.

நாம் 2020 இற்கு 02 இலட்சம் மதிப்பீடு செய்திருக்கின்றோம். ஆனால் இந்த வருடம் ரூபா 66558.89 எடுத்திருக்கின்றோம். மீண்டும் 02 இலட்சம் அதற்கான வருமானமாக காட்டுகின்றீர்கள். நாம் மேலதிகமாக கடன்களை ஊழியர்களுக்கு வழங்கி இருக்கின்றோமா என்ற கேள்வி, ஏனெனில் கடந்த காலங்களில் நாம் எவருக்கும் எமது சபை ஊடாக பணியாளர் கடன்கள் கொடுக்கப்படவில்லை என்பது நாம் அறிந்த விடயம். ஆகவே அது எவ்வாறு அதிகரிக்கப்படும் என்பது பற்றிய தெளிவு எங்களுக்கு வேண்டும்.அடுத்த விடயம் ஏனைய வருமானமாக ரூபா 150000.00 பொது நிர்வாகத்தில் குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். ஆனால் எமக்கு 2020 புரட்டாதி வரை ரூபா 400 ஆகும். ஏனைய வருமானம் எந்த அடிப்படையில் எங்கே 150000.00 நிதி வரப்போகின்றது என்று ஒரு தெளிவு வேண்டும். அதே போன்று சேவைக்கான சாட்டுதல்கள் 150000.00 நாம் கடந்த வருடம் மதிப்பீடு செய்திருக்கின்றோம். இந்த வருடத்தில் புரட்டாதி வரையில் எந்தவித வருமானமும் காட்டப்படவில்லை. எதிர்வரும் காலத்திலும் 150000.00 வருமானமாக காட்டி இருக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உண்மையாக இந்த விளக்கங்கள் எல்லாம் நாம் கலந்துரையாடி இருந்தால் அந்த நேரமே ஏற்படும். பணியாளர் கடன் வட்டி என்கின்ற விடயம் பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் கடன்களில் உத்தேச கணிப்பீட்டில் இருக்கும் மீதியில் வரவேண்டிய வட்டி. இந்த வருடத்தில் வருமானங்களில் நிறுவனங்களுக்கு இடையிலும் கொடுப்பனவுகளில் பிரச்சினைகள் இருக்கின்றது. ஏனென்றால் எல்லோரும் ஒரு அசாதாரண சூழ்நிலையில் செயற்படுவதால் இந்த வருடம் நாம் கடன்கள் எதுவும் கொடுக்கவில்லை. அதனால் நாம் கொடுக்கமாட்டோம் என்று இல்லை. அது ஒரு உத்தேசமாக 182 மில்லியனில் 02 இலட்சம் என்பது ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் தொகை அல்ல. உத்தேச கணக்காக போடப்பட்டுள்ளது. சேவைக்கான சான்றிதழ்களும் நீங்கள் கேட்டவாறு இவை எல்லாம் உத்தேச கணக்குகள். Tractor உம் Valuation இல்லை உத்தேச கணக்காக போடப்பட்டுள்ளது. ஒரு வரவு செலவு திட்டத்தில் எல்லா செலவுகளும் ஒவ்வொரு சதத்திற்கும் கணக்கு பார்ப்பதல்ல. சில வேளைகளில் உத்தேச கணக்குகளும் உள்வாங்கப்படுகின்றது.

அவ் உத்தேச கணக்குகளில் சில இடங்களில் குறிப்பாக எல்லாம் இப்படியான முறையில் கணக்கிட முடியாதவைகள் சென்ற வருடங்களின் தொகைகளை வைத்து மதிப்பீடாக போடப்பட்டு இருக்கின்றது. ஆனால் அவைகள் சிறு தொகைகள். சிறு தொகைகள் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதல்ல. ஆனால் நீங்கள் முதல் குறிப்பிட்ட அந்த விடயத்திற்கு விளக்கம் தர வேண்டும். நீங்கள் 2020 ஆம் ஆண்டு உத்தேச மதிப்பீட்டை பார்ப்பீர்களானால் வெளிப்புறத்திட்டமிடலில் 2020 உத்தேச மதிப்பீட்டில் 80 இற்கு கீழ் பார்த்தால் LDSP, LLDF, PSDG 42 மில்லியன். இவை எல்லாம் மானியங்கள் வருவது. மீளளிப்பு எல்லாம் சேர்த்துதான் அத் தொகை. இந்த வருடத்திற்கு உத்தேசம் 25 மில்லியன். அதில் 17 மில்லியன் வித்தியாசம் இருக்கின்றது மானியங்களில் வருகின்ற மதிப்பீடுகளால், மொத்த தொகை சரியாக பார்ப்பது என்றால் சபையின் தனி வருமானத்தில் இருந்து சரியாக படிப்பீர்களானால் சபையினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வருமானத்தை ஒரு புரம் எடுத்து நாம் கட்டாயமாக சபை நிதியில் செலவிட வேண்டிய செலவுகளை எடுத்து அதை மையமாக வைத்துதான் மற்றவைகளை சேர்த்து இந்த வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படுவது.

நிரந்தர ஊழியர்களின் சம்பளம் ஒரு பக்கம் உள்வரும், மற்றப் பக்கம் வெளியில் செல்லும். அது எமக்கு தாக்காது. நமது வருமானங்களில் மிகவும் கவனமாக அதைத்தான் கூறினேன் 54 ஊழியர்கள் 5ம் மாதம் நிரந்தரமாக உள்வாங்கப்படாவிட்டால் ஒரு பிரச்சினை வரும். அவர்களுக்கு நமது வருமானத்தில் தான் சம்பளம் கொடுக்க வேண்டும். நான் நிர்வாக முடிவுகள் எடுக்கும் போது நான் சென்ற சபையிலும் கௌரவ உறுப்பினராக இருந்து பேசியதும் அதுதான். எந்த முடிவு எடுத்தாலும் சொந்த வருமானத்தில் மீதி இருக்கின்றதா? சொந்த வருமானத்தில் செலவளிக்க முடியுமா? என்றால் அதை செய்யலாம். நாம் உருவாக்கியது நமக்கு செலவளிப்பதற்கு சபை அங்கீகரித்தால் அதை செய்யலாம். ஆனால் இன்னுமொரு இடத்தில் இருந்து வருவதை நாம் தீர்மானிக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் இந்த வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இதை சபையில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்னும் சில விடயங்களைப் பற்றி தெளிவுகள் தேவையாக இருப்பதால் அதனை கேட்கலாம் என்று கருதுகின்றேன். அது தேவை இல்லை எனில் நான் நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் கேளுங்கள், தெளிவு பெறுவதில் பிரச்சினை இல்லையே. அதற்குதான் கௌரவ உறுப்பினராக இருக்கின்றீர்கள்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சுகாதார சேவைகளில் வியாபாரம் அதில் கடந்த வருடம் 20 இலட்சம் மதிப்பீடு செய்தோம். எமக்கு புரட்டாதி வரை 10 இலட்சம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதனை நாம் இந்த வருடம் 20 இலட்சமாக அதிகரித்திருக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு மில்லியன் 9ம் மாதம் வரை. முதல் கேள்வி கேட்க வேண்டும் இந்த 02 மில்லியன் எப்படி எடுக்கப்பட்டது என்று, நமக்கென்று Trade Licence List இருக்கின்றது. இத்தனை பேர் Trade Licence எடுக்கின்றார்கள். அவர்களின் தொகை, அடுத்தது உத்தேச தொகை 10% கூடலாம் என்று உருவாக்குவதுதான் 02 மில்லியன். இந்த 09 மாதமும் கிட்டத்தட்ட 06 மாதம் அசாதாரண சூழ்நிலையினாலும் 50% அடைந்திருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, படவரைஞர் அனுமதிக் கட்டணம் என்று ரூபா 13000.00 நாம் அறவிட்டு இருக்கின்றோம். அதை ரூபா 20000.00 என்று மதிப்பீடு செய்திருக்கின்றோம். அது அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக சேவைகளும் சாட்டுதல்களும் பதிவு செய்தல் சான்றிதழ் கட்டணம் கடந்த வருடம் 03 இலட்சம் மதிப்பீடு செய்திருக்கின்றோம். அதே தொகையை மதிப்பீடு செய்திருக்கின்றோம். அதுவும் அதிகரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் கொரோனா காலத்திலும் ரூபா 161100.00 கிடைத்துள்ளது. அதனையும் அதிகரிப்பது சிறந்ததாக கருதுகின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவைகளில் நமக்கு Operational Trend என்று நிர்வாகத்தில் செல்லுகின்ற நேரம் அந்த நடைமுறையில் பார்த்துதான் மதிப்பீடுகள் செய்வது. இது எமது கட்டுப்பாட்டில் இல்லாத விடயம். வந்தால் அறவிடலாம், வராவிட்டால் அறவிட இயலாது. அவை எல்லாம் உத்தேச விடயங்கள். நான் உங்களிடம் பணிவாக கேட்பது என்னவென்றால் இந்த வரவு செலவு திட்டத்தை பார்க்கின்ற போது முக்கியமாக நாம் உருவாக்கக்கூடிய வருமானத்தில் சரியாக உள்வாங்கி இருக்கின்றோமா? அதில் எப்படி கூட்டலாம். ஏனென்றால் வருமானத்திற்கு ஏற்றாற் போல் செலவும் வைக்கலாம். நீங்கள் ஏன் 211 மில்லியனில் இருந்து 182 மில்லியனாக மாற்றியதற்கு நான் விளக்கம் தந்தேன். அதை நீங்கள் ஒழுங்காக விளங்கினீர்கள் என்றால் 45 மில்லியன் 25 மில்லியனாக மாறியதால் தான் அந்த மாற்றம் என்று தெரிந்திருந்தால் அந்த தெளிவு கிடைத்திருக்கும்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வெளிப்புறத் திட்டமிடல் வீதிகள் கட்டிடங்களில் நாம் இலத்திரனியல் விளம்பரப் பலகைக்காக 50 இலட்சம் மதிப்பீடு செய்திருக்கின்றோம். நாம் இந்த இலக்கை அடுத்த வருடத்திற்குள் அடைய முடியுமா? எவ்வாறு அடையலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது சென்ற சபையிலும் பேசப்பட்டது. இந்த சபையில் இதற்கு முழு மூச்சாக ஆர்வமாக இருந்தவர் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள். துரதிஸ்டவசமாக நமது காலத்தில் கொவிட் 19 மற்றும் அதனுடன் வந்த பிரச்சினைகள், நிர்வாக பிழைகளினால் நமக்கு அதை இன்னும் இயக்க முடியாமல் உள்ளது. இயக்கினால் நிச்சயமாக அந்த 50 இலட்சத்திற்கு மேலதிகமாக ஒரு வருமானத்தை பெறலாம் என்ற நம்பிக்கையில்தான் அந்த தொகை போடப்பட்டுள்ளது. ஏனென்றால் அது ஒவ்வொரு செக்கன் கணக்கிலும் வருமானம் தருவது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சொல்லப்போனால் ஆட்டே வாங்கவில்லை. ஆனால் அதன் பாகத்திற்கு விலை பேசுவது போல்தான் இது. இன்னும் இலத்திரனியல் விளம்பரப் பலகையே சரியாகவில்லை. நாம் எதிர்பார்க்கின்ற மாதிரி 50 இலட்சத்தை எதிர்பார்க்க இயலாது. அப்படி வந்தால் சந்தோசம். 50 இலட்சம் ஒரு வருடம் வரும் என்பது ஒரு கற்பனைதான். இவ் விடயத்தில் கூடுதலான தொகையை உள்வாங்கி இருக்கின்றோம். இதை வரவு செலவு திட்டத்தில் பெருமளவு குறைத்துதான் மதிப்பீடு செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சுகாதார சேவைகளில் ஏனைய வருமானத்தில் கூட்டுப்பசளை விற்பனை 9ம் மாதத்திற்கான வருமானம் ரூபா 305,000.00 அடுத்த வருடத்தில் எதிர்பார்ப்பது 10 இலட்சம். இது எந்தளவுக்கு சாத்தியப்படுத்தலாம் என்பது எனக்கு தெரியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சாத்தியப்படுத்த இயலும் என்றுதான் போடுபட்டுள்ளது. கூட்டுப்பசளை தயாரிப்பு இடத்தில் இருந்து அதற்கு இருக்கின்ற கிராக்கியைப் பற்றி அறிந்தீர்கள் என்றால் இன்றைக்கு மாவட்டத்திலே எல்லோரும் தேடி வருகின்ற ஒரு இடமாக இருக்கின்றது. தயவு செய்து விடயங்களை உள்வாங்குங்கள். நான் உங்களை பிழையாக வழி நடத்துவதற்கோ, நிர்வாகத்திற்கு ஒரு வரவு செலவு திட்டம் அமைக்க வேண்டும் என்பதற்காக செய்யவில்லை. நான் வருமானம் எல்லாவற்றையும் குறைத்துவிட்டு, செலவையும் குறைத்துவிட்டு ஒரு வரவு செலவு திட்டத்தை தரலாம். எனக்கு இந்த ஊரில் ஆகப் பெரிய விமர்சனம் அதுவும் அரசியல்வாதிகளிடம் இருந்துதான் மக்களிடம் இருந்து இல்லை. இவர் பணத்தை சேமித்து சேமித்து வைத்திருக்கின்றார் ஒன்றும் செய்கின்றார் இல்லை என்று, இப் பணத்தை சேமித்து வைக்காவிட்டால் இன்றைக்கு இதற்குள் இருக்கவும் இயலாது. அதை கௌரவப்படுத்துங்கள், மதியுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இறைச்சிக் கடை குத்தகை சென்ற வருட உத்தேச மதிப்பீடு ரூபா 12,600,000.00, இந்த வருடம் 9ம் மாதம் வரை கிடைக்கப்பெற்றது ரூபா 5,908,269.68 ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதன் முழுத்தொகையும் இந்த வருட இறுதியில் வரும். ஏனென்றால் வைப்பில் இருந்து மாற்றப்படும். கிட்டத்தட்ட 11 மில்லியன் வருட இறுதியில் தொகையாக வரும். இந்த வருமானம் 09 மாதத்திற்குள் வந்தது. 15 மில்லியன் போட்டது கடைகளை அதிகரித்து இருப்பதனால் ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்காலத்தில் மாடு அறுப்பு தடை ஒன்று இருந்தால்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதைத்தான் நான் ஆரம்பத்தில் கூறினேன். தடை செய்யப்பட்டால் இந்த சபையை கொண்டு செல்வதற்கு எமக்கு பாரிய சவால் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு வரவு செலவு திட்டத்தில் எங்களது சக உறுப்பினர்களும் பேசியதற்கு அமைவாக கடந்த 2019, 2020 வரவு செலவு திட்டங்களில் எந்த கேள்விகளும் கேட்காமல் எங்களை விட உங்களை நம்பியவர்களாக நாங்கள் வாக்களித்தோம் என்று கௌரவ உறுப்பினர் அவர்கள் பேசியதற்கு அமைவாக மிக்க சந்தோசப்படுகின்றேன். இப்போதும் உங்களை பிழை பிடிப்பதற்காக அல்ல. ஆனால் நாங்கள் கேள்வி கேட்டு பழக வேண்டும் என்பதற்காக கேள்வி கேட்கின்றார்கள். நீங்கள் அதை தயவு செய்து பொருந்திக் கொள்ள வேண்டும். எங்களது சக உறுப்பினர்களும் ஒரு விடயத்தை பொருந்திக் கொள்ள வேண்டும், ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எங்களுடைய 2020 ஆம் ஆண்டு உத்தேச வரவு எதிர்பார்ப்பு கிட்டத்தட்ட 211 மில்லியன். எங்களுக்கு புரட்டாதி வரை 79 மில்லியன்தான் வந்துள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான எங்களுடைய எதிர்பார்ப்பு 182 மில்லியன். காரணம் என்னவென்றால் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, அதற்கு பின்னரும் அப் பிரச்சினை நீடிக்குமானால் எதிர்பார்க்கப்படுகின்ற வரவுகள் கிடைக்குமா என்பதும் ஒரு கேள்விக்குறி.

எனவே அதை நாம் எல்லோரும் மனமுகந்து இதிலே நாங்கள் எவரும் எதிர்ப்புக்கள் தெரிவிக்காத வண்ணம் எல்லோரும் கடந்த காலங்களில் ஏகமனதாக ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதற்கு முன்மொழிவாக நாங்களும் உதாரணமாக இருக்க வேண்டும். இருக்கின்ற கடைசி தருவாயில் எங்களது ஊருக்கான மானத்தையும் எங்களது ஊருக்கான மரியாதையையும் நாம் எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும். கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் எங்களிடையே கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அதை எல்லாம் மறந்து எங்களுடைய வரவு செலவு திட்டத்தை ஏனைய சக பிரதேச சபைகள், சக வெளியூர் மக்களும் அவதானமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இதை எங்களது கருத்து முரண்பாட்டிற்கு அப்பால் எங்களுடைய முழு ஆதரவோடு எங்களுடைய சக உறுப்பினர்களும் ஏகமனதான ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சக உறுப்பினர் கூறியதை கேட்டுக் கொள்கின்றேன். ஒரு வரவு செலவுத் திட்டம் என்பது நாம் விவாதம் செய்து சரியான முறையில் அங்கீகாரம் செய்வது நமது மக்களுக்கு நாம் செய்யும் சேவையாகும். அந்த அடிப்படையிலே கடந்த காலங்களில் நாங்கள் செய்ய வேண்டிய கடமையை செய்யப்படாமல் விடுபட்டதனால்தான் இன்றைக்கு இதனைப் பற்றிய தெளிவு படுத்தல்களை கேட்க வேண்டி இருக்கின்றது. ஆகவே இதனை தவறான கண்ணோட்டத்தில் தயவு செய்து பார்க்கமால், கௌரவ உறுப்பினர்களே இதில் என்ன இருக்கின்றது என்பது உங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே நீங்கள் அந்த அடிப்படையில் அந்த கண்ணோட்டத்தில் பார்ப்பீர்களானால் நிச்சயமாக எங்களது தவிசாளர் இதிலே எந்த ஒரு மாற்றமும் இல்லை என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். ஆனால் சில இடங்களில் வரவை அதிகரித்து செலவையும் அதிகரித்து காட்டியிருக்கின்றீர்கள். சரியான வரவை காட்டி செலவையும் சரியான வரையறைக்குள் கொண்டு வந்தால் அது சிறப்பாக இருக்கும்.

ஒரு சில இடங்களில் ஒரு இலட்சம் ரூபா செலவு இடம்பெற்ற இடத்திற்கு 08 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இந்த 2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில். 08 இலட்சம் என்பது அதிகமான தொகை. செலவை அதிகமாக காட்டியதால்தான் வரவையும் அதிகமாக காட்ட வேண்டி இருக்கின்றது. எனவே இதனை சீர்செய்ய வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. அந்த வகையில் வரவு செலவு திட்டத்தில் கேள்விகளை கேட்க வேண்டியவனாக இருக்கின்ற நிலையில் கேட்கின்றேன். இது உங்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் பட்சத்தில் நான் நிறைவு செய்கின்றேன். நான் சில குறிப்புகளை கொண்டு வந்து உண்மையிலே கடந்த கட்டளைச் சட்டங்களை தேடி என்ன அடிப்படையில் இந்த வருமானங்களை அதிகரிக்க முடியும், மக்களின் வரிச் சுமையை குறைக்க முடியும் என்ற வகையில் சிந்தித்து தேடி வந்த விடயங்களைத்தான் கேட்கின்றேன். எனவே இதில் கௌரவ உறுப்பினர்கள் கூறியது போன்று ஒட்டுமொத்தமாக கையை உயர்த்திவிட்டு செல்வோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த வரவு செலவுத் திட்டம் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றதா? உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறியவனாக,

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வரவு செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்படுவது என்றால் ஒட்டுமொத்தமாக அங்கீகரிக்கப்பட்டு விட்டதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆம், எதிர்ப்பு என்றால் சொல்லுங்கள் பிரச்சினை இல்லை. அதைத்தான் நான் சபையில் கேட்டேன். நான் இதில் உள்ள ஒவ்வொன்றுக்கும் தெளிவுபடுத்த தயாராக இருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது எதிர்வருகின்ற வருடத்திற்காக இவ் ஊரினுடைய தலைவிதியை தீர்மானிக்கின்ற ஒரு நாள். தயவு செய்து யாருடைய அரசியல் காற்புரட்சிகளை கொண்டு வந்து இந்த இடத்திலே நீங்கள் இதை ஏற்றுக் கொள்ள முடியுமாக இருந்தால் கௌரவ தவிசாளர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க என்னால் ஏற்றுக் கொள்ள முடியும் என்பதை தாமாக எழுந்து நின்று அக் கருத்தை தெரிவிங்கள் இல்லாவிடில் இதனை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறிவிட்டு அடுத்த கட்டத்திற்கு செல்லுவோம். யார் ஏற்றுக்கொண்டார், யார் பிரேரித்தார், யார் ஆமோதித்தார் என்று மாறி மாறி பேசிக்கொண்டிருப்பதற்குரிய நேரம் இல்லை.

**தீர்மானம் - 04/33/07**
1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/33/08

எமது சபையின் மின் சக்தியினை BULK SUPPLY யாக கூட்டுவதற்காக தேவையான பணத்தை மின்சார சபைக்கு வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீதியோர மீன் வியாபாரத்தை தடை செய்தல், சம்மாந்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட விளினியடி சந்தி மற்றும் அரபா பாடசாலை வீதியில் மேலும் இலங்கை வங்கி கிளைக்கு அருகாமையில் உள்ள வீதியில் பயணிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக வீதிகளில் மீன் வியாபாரிகளினால் மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றது. தற்போது நாட்டில் ஏற்பட்டு வருகின்ற கொவிட் 19 நோய் பேலியக்கொட மீன் வியாபாரத்தில் தொற்றி இருக்கின்றது. இவ் வீதியோரங்களில் வியாபாரங்கள் நடைபெறுவதனால் பாதைகளில் பயணிக்கின்ற பயணிகளுக்கும் மற்றும் அரபா பாடசாலை வீதியோரங்களில் மீன் வியாபாரம் செய்வதனால் பாடசாலைக்கு செல்கின்ற மாணவ மாணவிகள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். கடந்த மாதம் ஒரு பயணம் ஒன்று விளினியடி பாதையால் சென்று கொண்டிருக்கும் போது மீன் வியாபாரி ஒருவர் வடியில் கொண்டு வந்து ஒரு வீட்டிற்கு அருகில் மீன் விற்கின்றார்.

அவ் வீட்டில் சிறுவர்கள், வயதிற்கு வந்தவர்கள் எல்லோரும் இருக்கின்றார்கள். அவ் வீட்டில் இருக்கின்ற பிள்ளைகள் அதற்கு பக்கத்தில் நிற்கின்றார்கள். அதனால் வருகின்ற பக்க விளைவுகள் அக் குழந்தைகளுக்கு தெரியாது. இது சம்மந்தமாக கடந்த ஒரு கூட்டத்திலும் மீன் வியாபாரத்தினைப் பற்றி பேசினேன். அதில் எந்தவிதமான நடவடிக்கைகளும் சபையால் எடுக்கப்படவில்லை. மீன் வியாபாரிகளுக்கான உரிய இடத்தை சபையால் ஒதுக்கி கொடுத்தால் அவ்விடத்தில் மீன் வியாபாரங்களை செய்யலாம். தற்போது கொவிட் 19 நோய் மீன் வியாபாரம் மூலம் பரவுகின்ற காரணத்தினால் அவர்களுக்குரிய இடத்தை ஒதுக்கி மீன் வியாபாரத்தை செய்தால் பாதைகளினால் செல்லும் பயணிகளுக்கு அது அசொகரியம் ஏற்படாமல் ஊருக்கும் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதற்காக மீன் வியாபாரத்திற்காக ஒரு இடத்தை சபையால் ஒதுக்கி கொடுத்தால் நல்லது என நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவிசாளராக இருக்கும் போதே இப் பிரச்சினை. மீன் விற்பதற்கு ஒரு புறம்பான இடம் இல்லை. இந்த பிரதேசத்திற்குள் பொருத்தமான இடம் ஒன்று இல்லாததுதான் பிரச்சினை. அல் மர்ஜான் பாடசாலை முன் வளவுக்குள் மீன் விற்க இயலாது. அதைச் சுற்றி மக்கள் இருக்கின்றார்கள். மீன் வியாபாரம் என்று சொல்லும் போது தற்போது நடப்பது பொருத்தம் இல்லாத இடம். நானும் பல தடவை என்ன செய்யலாம் என்று யோசிப்பது. தடை செய்வது என்பது இலேசான விடயம் ஆனால் இதற்கு மாற்று இடம் கொடுப்பது என்பதுதான் சவால். மீன் வியாபாரிகளுக்கு ஒரு மாற்று இடம் கௌரவ உறுப்பினர்களே உண்மையாக எனக்கு தெரியாது. நானும் சில நேரம் Food City அருகில் Park பண்ணிவிட்டு மற்றப்பக்கம் வந்து மீன் வாங்கிவிட்டு செல்வது. ஆனால் நான் பிழை செய்கின்றேன் என்று எனக்கோ விளங்குகின்றது. அந்த இடம் மீன் விற்பதற்கு பழக்கமாக மாறிவிட்டது. அதை எவ்விடத்தில் மாற்றலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதை பழைய சந்தைக்குள் மீன் சந்தையை உருவாக்க இயலாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பழைய சந்தைக்குள் மீன் சந்தையை உருவாக்கலாம். ஆனால் பழைய சந்தையில் சொத்துதான் இருக்கின்றது. Purchasing Power இங்கு இருக்கின்றது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முதலாவது ஏன் இப்படி மீன் விற்கின்றார்கள் என்று மீன் வியாபாரிகளை கேட்டோம். அவர்கள் ஒவ்வொரு நாளும் வங்கிற்கு முன் மீனை விற்கின்றார்கள். பகலில் சந்தைக்கு முன் விற்கின்றார்கள். அவர்களிடம் ஆய்வு செய்கின்ற போது அவர்கள் கூறுகின்றார்கள் மீன் விற்பது மக்களுக்கு தெரிவதில்லை என்று, சந்தைக்குள் ஒரு பகுதியை அவர்கள் தெரிவது போல் ஒரு ஏற்பாடு செய்தால் ஊருக்குள் விற்பவர்கள் எல்லோரையும் சந்தைக்குள் கொண்டு வந்தால் ஏனைய கடைகளை மரக்கறி கடைகளாக மாற்றிவிடலாம். வியாபாரமும் கூடும். மீன் விற்பது தெரிவதில்லை என்பதற்காகத்தான் அங்கு வருகின்றோம் என்று கூறுகின்றார்கள். அவர்கள் கூறுவதையும் யோசிக்க வேண்டும். அவர்கள் காலையில் சென்று மிகவும் கஸ்டப்பட்டு கொண்டு வருகின்றார்கள்.

நான் ஒரு கருத்தை முன்வைத்தேன் அதாவது வெளியில் விற்கின்ற விலையை ஊருக்குள் விற்றால் உங்களது மீன் விலை போகும் என்று கூறினேன். எப்போதும் மக்கள் எதிர்பார்ப்பது வெளியில் குறைவாக இருக்கின்ற மாதிரிதான் அவர்களின் விற்பனை நடைமுறை இருக்கின்றது. ஆனால் நாங்கள் அதே வீதத்திற்கு எங்கு விற்பனை செய்தாலும் வருகின்ற வீதம் குறைவாக இருக்கின்றது என்று, ஏனைய இடங்களில் பார்த்தால் மீன் வெளியில் விற்பது மாதிரி ஒரு அமைப்பு இருக்கின்றது என்று கூறினார். நாங்கள் மீனவர் சங்கத்தை அழைத்து மீனை நீங்களே கட்டுப்படுத்தி தர வேண்டும். ஏற்பாடு எங்களால் செய்ய முடியும் என ஒரு பொதுவான உடன்பாட்டோடு ஒத்துழைத்து அதற்கு ஒரு ஏற்பாடு செய்தோம் என்றால் நாம் நிச்சயமாக முரண்பாட்டை தவிர்த்துக் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீன் விற்பனை என்பது நீண்டகாலமாக இந்த ஊரில் மிகவும் பிரச்சினையாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் கண்ட கண்ட இடங்கள் எல்லாம் மீன் வியாபாரிகளின் நலனுக்காக அவர் அவர்கள் நினைத்த இடங்கள் எல்லாம் மீன் விற்பனை செய்வதற்கு நாங்கள் அனுமதிப்பது என்பது இந்த சபையிடம் சரியான திட்டம் இல்லை என்பது மற்றவர்கள் விளங்கக்கூடியதாக இருக்கலாம் என் கருதுகின்றேன். அதே நேரத்தில் வெளியூர்களில் மீன் சந்தை பெண்கள் சந்தை என்று இருக்கின்றது. அந்த அடிப்படையில் இன்று பழைய சந்தையில் இருக்கின்ற சந்தையை மீன் சந்தையை பிரகடனப்படுத்தி ஊரில் அதற்கு ஒரு விளம்பரத்தை அறிவித்து சபை ஊடாக நடைமுறைப்படுத்துவது மிகவும் சாலச் சிறந்ததாக இருக்கும். ஏனைய இடங்களில் எக் காரணத்திற்கும் மீன் வியாபாரங்களை செய்வது தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். அதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பையும் பெற்று இதை நடைமுறைப்படுத்துவது இந்த ஊரின் எழிலுக்கு சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போல் சம்மாந்துறையில் மட்டுமல்ல வெளியூர்களில் பார்த்தோமானால் மீன் வெளியில்தான் விற்கப்படுகின்றது. வாகனத்தில் செல்கின்ற ஒருவர் மீன் இலாபம் என்றால் வெளியில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. எமது சந்தையில் இலாபமாக இருந்தாலும் மீன் வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் வருபவர்கள்தான் இறங்கி செல்கின்றார்கள். நாங்கள் அக்கரைப்பற்றில் இருந்து மட்டக்களப்பு வரைக்கும் செல்லும் போது வீதியோரங்களில் மீன் இருந்தால் விலை குறைவாக இருக்கும் என்று வாங்கி செல்வோம். Main இற்கு மீன் வியாபாரத்தை எடுத்தால் நல்லது என்று நினைக்கின்றேன். அல்லது மீன் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றுவோம். அல்லது அல் மர்ஜான்

பாடசாலைக்கு முன் இருக்கின்ற இடத்தில் பகுதி நேரத்திலாவது கொடுக்கலாம். மீன் விற்பதற்கு ஒரு பார்வையான இடம் கொடுப்பதில் நன்மை இருக்கத்தான் செய்யும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 2 Entrance இருக்கின்றது. அதில் ஒரு Entrance ஐ மீன் விற்கக் கூடியதாக செய்து இறைச்சிக் கடைகளை அடுத்த பக்கத்தில் மாற்றி இரண்டையும் இணைத்தால் சகலரும் வந்து வாங்கலாம். நமக்கு இருக்கின்ற ஒரே ஒரு தீர்வு அதுதான்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போல் மீன் வியாபாரிகள் எல்லோரையும் அழைத்து பேசுவோம். அவர்களின் கருத்து எப்படி இருக்கின்றது என்று பார்ப்போம். எமது சந்தையில் இருக்கின்ற சூழலுக்கு நான் அவதானித்தது Parking ஒழுங்கு இல்லை. சில நேரம் மீன் வாங்க வருபவர்கள் வாகனம் போடுவதற்கு இடம் இல்லை என்று விளினியடியில் சென்று வாங்கி செல்கின்றார்கள். இவ்விடம் பொருத்தம் இல்லாத இடமாக மாறுகின்றது. மாற்று நடவடிக்கை ஒன்று செய்ய வேண்டி இருக்கின்றது. நாம் கலந்துரையாடல் ஒன்றை செய்து முடிவு எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது 4வது சபையின் 33வது அமர்வுக்கான முன்மொழிவுகள் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மல்காம்பிட்டி வட்டாரம் மிகவும் பின்தங்கிய பிரதேசம் என்பதோடு அங்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் தேவை அதிகமாக இருப்பதனால் இத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்களிடம் பணிவாக வேண்டிக் கொள்கின்றேன். புளக் ஜே 2ம் பிரிவில் உள்ள பல்தேவை கட்டிடத்தில் வாசிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பித்தல். இந்த இடத்தில் ஏற்கனவே எமது சபையினால் ஒரு சிறிய வாசிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பத்திரிகைகள் வாசிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. துரதிஸ்டவசமாக இதனை பராமரித்து வந்தவர் சுகயீனமுற்ற காரணத்தினால் எமது சபைக்கு எழுத்து மூலம் தெரிவித்துவிட்டு ஒரு குறிப்பிட்ட காலம் அது நடைமுறையில் இல்லாமல் இருக்கின்றது. எனவே இன்று இருக்கின்ற சூழ்நிலை இக் காலகட்டத்திற்கு அவ்வாறான ஒரு வாசிப்பு நிலையம் இந்த இடத்திற்கு தேவை அதனை நாள்தோறும் பராமரிப்பதற்காக அப் பிரதேசத்திலே உள்ள சமூக சேவை அமைப்பு ஒன்று முன்வந்துள்ளது. அவர்கள் என்னிடம் கேட்கின்றார்கள். ஆகவே இதனை சபை ஒரு தீர்மானமாக மேற்கொண்டு இதனை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்கின்றேன்.

அத்தோடு முஹல்லா மஹல்லா மையவாடி சுற்றுப்பாதையினை புணர் நிர்மானம் செய்தல். குறித்த பாதை வீரகொட குளத்தடியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு முஹல்லா மஹல்லா மையவாடி பொதுவில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதே போல் கல்லரிச்சலில் இருந்தும் முஹல்லா மஹல்லா மையவாடி பொதுவில் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது அந்த இடத்திலே தனி நபர்களுடைய ஆதிக்கம் கூடுதலாக இருக்கின்றது. அப் பகுதியில் இருந்த தரிசு நிலத்தை யாரோ ஒருவர் துப்பரவு செய்து உட்புரமாக வேலி அமைத்து காணப்படுகின்றது. எனவே இந்த வீதியை புணர்நிர்மானம் செய்வதற்கு இந்த சபையினால் ஒரு முடிவினை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறே நெய்னாகாட்டு பிரதான வீதிக்கான மின்கம்பங்களில் LED மின் விளக்குகளை பொருத்துதல். அப் பிரதேசம் இன்றும் கூட காட்டு யானைகளின் தொல்லைகளை எதிர்நோக்குகின்றார்கள். சம்மாந்துறையின் கரையோரமாக இருக்கின்ற படியினால் நைனாகாட்டு கிராம சேவகர் பிரிவின் பிரதான பாதைக்கு LED மின்விளக்குகளை பொருத்தித் தருமாறு அங்கு இருக்கின்ற பள்ளிவாசல் நிர்வாகங்களும் ஏனைய சமூக சேவைகள் அமைப்புகளும் வேண்டிக் கொண்டார்கள்.

அதே போன்று செந்நெல் கிராமம் 2ம் பிரிவில் உள்ள தக்குவா கிழக்கு வீதியினை மக்கள் பாவனைக்காக அபிவிருத்தி செய்தல். இந்த வீதியும் மிக முக்கியமான ஒரு வீதியாக காணப்படுகின்றது. இந்த வீதி மலை சார்ந்த பிரதேசமாக இருப்பதனால் தனி நபர்கள் அவர்களுடைய காணிகளை துப்பரவு செய்கின்ற போது அவ் வீதியை சம தரையாக்கி அவர்கள் வெட்டி இருப்பதனால் அங்கு மண்சரிவு ஏற்படக்கூடிய ஒரு அபாய நிலை இருக்கின்றது. அதே

போன்று 40 வீட்டுத்திட்டத்தில் இருக்கின்ற மக்கள் உதாரணமாக அப் பிரதேசத்திலே ஜனாசாக்கள் ஏற்படுகின்ற போது அவ் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்வதற்காக ஒன்று சென்னல் கிராமத்திலே உள்ள அழ்பர் பள்ளிவாசல் மையவாடிக்கு செல்ல வேண்டும். இல்லாவிடில் முனீர் பள்ளிவாசலுக்கு செல்ல வேண்டும். அவ்வாறு ஜனாசாக்களை அடக்குவதற்காக முனீர் பள்ளிவாசலிலே உள்ள மையவாடி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அவ்வாறு இவ் ஜனாசாக்களை தக்குவா வீதியின் ஊடாக கொண்டு செல்வார்களானால் ஒரு 200 மீற்றர் தூரத்திற்குள் கொண்டு செல்ல முடியும். இல்லாத பட்சத்தில் அவர்கள் ஏறத்தாள 1 ½ கிலோ மீற்றர் ஊடாகத்தான் அவ் ஜனாசாக்களை முனீர் பள்ளிவாசலுக்கு கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றது. இதனை கருத்திற் கொண்டு இவ் ஊரின் முக்கியமான விடயம் என்று இதை சபை ஊடாக அமுல்படுத்த வேண்டும்.

பலாபள்ளி வாசலை சுற்றி காணப்படும் தரிசு நிலத்தினை அழகுபடுத்தல். அப் பள்ளிவாசலின் இருபுரங்களிலும் தரிசு நிலம் இருக்கின்றது. அந்த இடத்தில் தற்போது குப்பைகளை கொட்டுவதற்கு ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே அந்த இடத்தை அழகு படுத்தி மக்கள் பாவனையாக அல்லது ஓய்வு எடுக்கக் கூடிய இடமாக மாற்றினால்தான் அவ் இடத்தில் குப்பைகள் கொட்டுவதை தடுக்க முடியும் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களின் சிபார்சில் பாதை ஒன்று கொச்சிக்காய் தூளர் சந்தியில் இருந்து மையவாடி வரைக்கும் நிர்மானிக்கப்படப்போகின்றது. இதை தொடங்கினால் பாலத்தடியில் வந்து சேர்க்கலாம். நான் 5,6 வருடங்களாக பேசி சென்ற கிழமை நான் DD ஐ சந்தித்து இந்த சூழலை விளங்கப்படுத்தினேன். S வாய்க்கால் உண்மையாக பராமரிக்கப்படுவதில்லை. மஜீட்புர பாலத்தடியில் இருந்து மேற்குப் பக்கம் சென்றால் மிகவும் அழகாக இருக்கின்றது. கிழக்குப் பக்கம் வந்தால் அசிங்கமாக இருக்கின்றது. அவரிடம் கூறினேன், நீங்கள் ஒவ்வொரு வருடமும் எங்களையும் சேர்த்து பொது மக்களையும் சேர்த்து ஒவ்வொரு 100 மீற்றராவது அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று, முஹல்லா மஹல்லா மையவாடி சுற்றுப்பாதை Walking Track மாதிரி அமைப்பதற்கு நாம் அரைவாசி ஒதுக்கி இருக்கு எமது JCB ஐ போட்டு செய்ய வேண்டும். LED மின்விளக்குகள் வீரமுனைக்கு வருவதில் எஞ்சும் என்று நினைக்கின்றேன். செந்நெல் கிராமம் 2ம் பிரிவில் உள்ள தக்குவா வீதியினை பார்வையிட்டு செய்வோம்.

## தீர்மானம் - 04/33/09

புளக் ஜே மேற்கு 2ம் பிரிவில் உள்ள பல்தேவை கட்டிடத்தில் வாசிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/33/10

முஹல்லா மஹல்லா மையவாடி சுற்றுப்பாதையினை புணர் நிர்மானம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/33/11

நெய்னாக்காட்டு பிரதான வீதிக்கான மின்கம்பங்களில் LED மின் விளக்குகளை பொருத்துவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/12**
சென்னல் கிராமம் 2ம் பிரிவில் உள்ள தக்குவா கிழக்கு வீதியினை மக்கள் பாவணைக்காக அபிவிருத்தி செய்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/13**
பலாபள்ளி வாசலை சுற்றி காணப்படும் தரிசு நிலத்தினை அழகுபடுத்துவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.நஜீம்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நேற்றிரவு ஜம்மியதுல் உலமா அவர்களின் காரியாலயத்தில் இருந்து எனக்கு ஒரு அறிவித்தல் வந்தது. Cabinet இல் சில நிபந்தனைகளோடு ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்காக ஒரு கருத்து ஒருமைப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதில் நிபந்தனை ஒன்று மக்கள் வாழும் இடத்தில் இருந்து 250 மீற்றர் தூரம் இருக்க வேண்டும். 1 ½ மீற்றருக்குள் நீர் இருக்கக்கூடாது. ஒரு மீற்றர் ஆழத்தில் அடக்க வேண்டும் என்று, நாம் எல்லோரும் ஊரைக்கூட்டி ஒரு முடிவு எடுத்து சம்மாந்துறையில் அடக்கம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்திருக்கின்றோம். இதில் ஒரே ஒரு நிபந்தனை 250 மீற்றர் சிக்கலாக இருக்கின்றது. 100 மீற்றர்க்குள் குடியாட்டங்கள் இருக்கின்றது. மலை இருப்பதால் ஒரு மீற்றர் கீழ் போக இயலாது. அவர்களிடம் நான் சொன்னேன். நாங்கள் ஊர் தீர்மானம் எடுத்திருக்கின்றோம். நாங்கள் செய்வதற்கு தயார். இருந்தாலும் அவர்களின் நிபுணத்துவ குழு வர வேண்டும். நாங்கள் சம்மதம் தெரிவித்தவுடன் வந்து பார்த்து பொருத்தம் என்றால் சிபார்சு செய்வார்கள். நமக்கு இருக்கின்ற ஒரே ஒரு பிரச்சினை கிழக்குப் பக்கத்தில் உள்ள குடியாட்டங்கள். கிழக்குப் பக்கத்தில் இருந்து பார்த்தால் 250 மீற்றர் அடைய இயலாது. அவ்விடத்தை பார்த்துவிட்டு தடை இல்லாதபடியினால் ஒரு அனுமதி தந்தாலும் தரலாம். இல்லாவிட்டால் தற்போது மன்னார் மாவட்டத்தை இனங்கண்டிருக்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, S 15 மஜீட்புரத்திற்கு செல்கின்ற வழியில் சுங்கார காலைக்கு பின்னால் கிட்டத்தட்ட ¾ ஏக்கர் ஒருவரால் பிடிக்கப்பட்டுள்ளது. அது S 15 இன் Tank. கிட்டத்தட்ட 3,4 வட்டைகளுக்கு நீர் போவதற்குரிய Tank. இந்த Tank இல் தான் நீர் பாய்ச்சுவது. நாங்கள் DS Office, Irrigation Office எல்லோரிடமும் கூறினோம். அந்த மடுவை மூடி வேளாண்மை செய்து கொண்டிருக்கின்றார்கள். அதற்கு பேமிட் கொடுத்தவர்கள் யார் என்று முதல் அறிய வேண்டும். அதே போன்று S 22 அதுவும் பலதடவை கதைத்திருக்கின்றேன். நாள் ஒரு வண்ணம் மூடப்பட்டு வருகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சில்வாட மடு நிரப்பியதற்கு எதிராக Irrigation வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அரசியல் அழுத்தங்களால் வருகின்ற பிரச்சினையால் அப்படியோ இருக்கின்றது. கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் கூறியது போல் அக் குளம் எல்லோருக்கும் தெரியும். அக் குளம் மூடியது மட்டுமல்லாமல் பேமிட் உம் கொடுக்கப்பட்டுள்ளது. என்ன அடிப்படையில் பேமிட் வழங்கப்பட்டுள்ளது. நமக்கு முதுகெலும்பு விவசாயம். இந்த விவசாயத்திற்கு நீர் வழங்கல் முறை எல்லாம் ஒழுங்காக இருக்க வேண்டும். பொது இடங்களை அவர்களுக்கு பராமரிக்க இயலாவிட்டால் அப் பராமரிக்கும் பொறுப்பை பிரதேச சபைக்கு பாரம் தருவதற்கு ஒரு தீர்மானம் எடுப்போம்.

**தீர்மானம் - 04/33/14**

பொது இடங்களை உரியவர்கள் பராமரிக்காவிட்டால் அதை பராமரிக்கும் பொறுப்பை பிரதேச சபை பாரம் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/15**

S – 15 வாய்க்கால், S – மெயின் வாய்க்கால் என்பவற்றில் நீர் தேங்கி வைக்கப்படும் சிறிய குளங்கள் சுவீகரிக்கப்படுவது தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அறிவிப்பது தொடர்பான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அதுமாத்திரமல்ல நாம் ஏற்கனவே 28வது சபையிலே முஹல்லா மஹல்லா மையவாடியை சென்று பார்த்து மண் போடுவதற்கு முடிவெடுத்தோம். நான் ஒரு காணி உரிமையாளரிடம் மண் கேட்டு அவர் தருகின்றேன் என்று அவரின் பேமிட் இன் பிரதியை கேட்டு அதை கொண்டு தந்திருக்கின்றேன். சென்ற மாதம் ஒரு ஜனாசாவை அடக்குவதற்கு 03 இடத்தில் கபூர் வெட்டி மூடப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் எல்லா ஜனாசாக்களும் அங்குதான் அடக்கம் செய்யப்படும். அந்த நிர்வாகம் சொல்கின்றார்கள் நீங்கள் எல்லோரும் வந்து பார்யைிட்டு சென்றீர்கள் இதற்கு ஒரு முடிவும் எடுக்கவில்லை என்று கூறுகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இது பாரிய ஒரு பிரச்சினை. முஹல்லா மஹல்லா மையவாடிக்கு மண் போடுவது என்றால் Retention Wall அடிக்க வேண்டும். இது தைக்காப்பள்ளி போல்தான் வரும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பாதைகள், பாலங்கள் எல்லாம் அரசாங்கம் செய்யும். தேவையில்லாத சின்ன சின்ன பிரச்சினைகளை செய்வதைவிட இது எமது ஊருக்கும் இனத்துக்குமானது. அதில் செலவளிக்கின்ற தொகையை இதற்கு செலவளித்தால் மக்களின் நலனுக்காக பிரயோசனமாக இருக்கும் என்பதை கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஒரு ஜனாசாவை அடக்குவதற்கு 2அடி, 3அடிக்குள் மலை வருகின்றது என்றால் ஆகக்குறைந்தது இன்னும் 03 அடி மண் போட வேண்டும். இன்ஷா அல்லாஹ் அதைப் பார்க்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கௌரவ உறுப்பினர் ஜிப்ரி, கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் நஜீம் எல்லோரும் சேர்ந்து பாதைகள் சம்மந்தமான கள விஜயம் செய்து பார்வையிட்டோம். பார்த்ததை விட மேலதிகமாக இதில் இணைக்கப்பட்டுள்ளது. நாங்கள் பார்க்காததும் இதில் வந்திருக்கின்றது அதனையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த அறிக்கை சென்ற மாதம் 28ம் திகதி என்னுடைய மேசைக்கு வந்தது. அதில் இன்னும் ஒன்றும் செயற்படுத்தவில்லை.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபை பணத்தைக் கொண்டு அபிவிருத்தி செய்வது என்றால் நிச்சயமாக சபையில் இருக்கின்ற 20 உறுப்பினர்களுக்கும் அதை சமபங்காக குறைந்தது 05 இலட்சமாவது ஒதுக்கீடு செய்து செய்ய வேண்டும். எனது பிரதேசத்திற்குள் வேலை இல்லை என்றால் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் சொல்கின்ற வேலையை நாம் அங்கு சென்று செய்ய வேண்டும். இந்த வருடமும், அடுத்த வருடமும் என்ன கஸ்டம் வந்தாலும் இருக்கின்ற 02 வருடங்களுக்கும் இந்த அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் 05 இலட்சம் அபிவிருத்தி நிதியை ஒதுக்கி செய்ய வேண்டிய வேலை கூடுதலாக இருக்கின்ற இடத்தில் மற்றவர்கள் அதே மதிப்பீடு செய்து அந்த அமைப்பில் செய்ய வேண்டும். சென்ற முறை பெண்கள் வலுவூட்டல் என்று ஒன்றை உருவாக்கினோம். அதை இந்தமுறை செய்யவில்லை. பெண்கள் வலுவூட்டல் கட்டாயம் செய்ய வேண்டும். அதில் நாங்களும் ஒவ்வொரு இலட்சம் பங்கு எடுத்தோம். ஏதோ ஒரு அடிப்படையில் இந்த அபிவிருத்தியினை குறிப்பிட்ட பிரதேசத்திற்கு செய்வது என்றாலும் மற்றவர்களுக்கு செய்ய இயலாது என்றாலும் சமமாக பங்கீடு செய்தால்தான் என்னைப் பொருத்தவரைக்கும் ஒரு தாழ்மையான அபிப்பிராயம். இதை இந்த சபைக்கு எத்தி வைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கல்வெட்களின் பட்டியல் ஒரு கௌரவ உறுப்பினரின் கையொப்பம் இல்லாமல் வந்தது. நான் பண நிலமைகளை பார்த்து குறைந்த 03 வேலையை ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றேன். பிரதேச சபையின் சட்டத்தின் கீழ் நமக்கு வெளிப்படையாக அங்கத்தவர்களுக்கு என்று ஒதுக்கீடு செய்ய இயலாது. மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நான் எந்த பாரபட்சமும் இல்லாமல் பொது நோக்கோடு சில நேரம் நீங்கள் கேட்டு செய்யாமல் இருக்கலாம். கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் ஒரு கல்வெட் அமைப்பதாக கூறி அதற்கு பின் அப் பாதையை செய்கின்ற போது அக் கல்வெட்டையும் உள்வாங்களாமா என்று, அவ்வாறு ஒவ்வொன்றுக்கும் ஏதோ ஒரு வகையில் எந்த பாரபட்சமும் இல்லாமல் இவ்வளவு காலமும் இப்படித்தான் பயணித்திருக்கின்றோம். முரண்படுவதற்காக நான் ஒதுக்கி வைப்பதில்லை. 02 மாதங்களும் கௌரவ உறுப்பினர்கள் ஒருவரும் சந்தித்து பேசவில்லை. நான் எதிரியாக பார்த்ததில்லை. நீங்களாகவே தள்ளி இருந்து விட்டு சேர்க்கவில்லை என்று கூறுகின்றீர்கள். பழைய மார்க்கட் பிரச்சினை ஒன்று வந்தது தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் கூறினேன். கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களுடன் கலந்துரையாடி தீருங்கள் என்று, நீங்களாகவே விலகி இருக்க வேண்டும் என்றால் அது வேறு விடயம்.

## தீர்மானம் - 04/33/16
பின்வரும் வேலைகளை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் செயற்படுத்துவதற்கான பிரேரணை.

1. Purchasing of Street Lamp Item for Veeramunai – Rs. 998,400.00
2. Renovation Construction of Boundary Wall with Grill Work at Veeramunai Play Ground (Stage II) – Rs. 2,157,601.64

3. Renovation of Concrete surface Culvert & Drainage at Navakkadu S-24 (Part of Zam Zam Drain) – Rs. 2,150,802.65
4. Renovation of Concrete Surface Drainage & Culvert at Sinnakovil Road Veeramunai – 02 – Rs. 2,157,923.05
5. Renovation of Concrete surface Drainage & Culvert at Arasadi Road Veeramunai – 01 – Rs. 2,157,923.05
6. Renovation of Concrete surface Drainage & Culvert at 30 House Scheme Road, Veeramunai – 04 – Rs. 1,995,349.40
7. Purchasing Furniture Items For Veeramunai Library at Sammanthurai Pradeshiya Sabha – Rs. 225,000.00

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/33/17**

பின்வரும் வேலைகளை எமது சபையின் மூலம் செயற்படுத்துவதற்கான பிரேரணை.

1. வடிகான் திருத்தம், சதக்கர் லேன்
2. கல்வெட் அமைப்பு, மல் 14ம் வீதி
3. கல்வெட் அமைப்பு, பண்ணையார் வீதி மலையடி – 01
4. புளியடி 4ம் வீதி
5. கல்வெட் அமைப்பு கைகாட்டி சிறுவர் பூங்கா எதிர்
6. கொங்கிறீட் வீதி அமைப்பு ஹிஜ்ரா 8ம் வீதி மட்டக்களப்புத்தரவை – 02
7. வடிகான் மத்திய வீதி புளக் ஜே - 02
8. S – 24 விஷவைத்தியர் வீதி, மலையடிக்கிராமம் - 03

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 04/29/12 கூட்டத் தீர்மானத்தின் படி வண்டு வாய்க்கால், சின்னப்பள்ளி, கொச்சிக்காய்தூளர் சந்தி ஆகிய இடங்களில் இருப்பிடங்கள் அமைப்பதாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது. எங்களுடைய கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் அப் பிரேரணை கொண்டு வந்த சந்தர்ப்பத்திலே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இருந்தாலும் இந்தப் பிரதேசங்களிலே இருப்பிடங்கள் அமைக்காமல் ஒரு வட்டாரத்திலே குறிப்பாக ஒரு பிரதேசத்திலே அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு மாத்திரம் இல்லாமல் அண்மையிலே SLIATE வீதிக்காக தற்போது நீங்கள் குறிப்பிட்டீர்கள் அவ் வட்டார உறுப்பினர்களோடு கலந்து ஆலோசித்து அந்த வேலைகளை செய்ய வேண்டும் என்று ஆனால் அந்த வட்டாரத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு தெரியாமல் எமது சபையினுடைய JCB வாகனத்தைக் கொண்டு ஒரு பாதையை சுத்தம் செய்கின்றார்கள். எங்கே இருக்கின்ற வட்டாரத்தின் உறுப்பினர் என்னுடைய வட்டாரத்திலே எமது சபையினுடைய வாகனத்தைக் கொண்டு செப்பனிடுகின்ற போது எங்களுக்கு தெரியாமல் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதே வட்டாரத்தின் அங்கத்தவன்தான் நான். என் அனுமதியுடன்தான் அப் பாதையில் ஒரு தொங்கல் காண வேண்டும் என்று எனது அனுமதியைப் பெற்றுவிட்டுதான் கௌரவ உறுப்பினர் அவர்கள் அரச பிரதிநிதியாக இருப்பதனால் அந்த வேலையை துரிதமாக செய்யலாம் என்ற எண்ணத்தில் என் அனுமதியுடன் அந்த வேலைக்கு JCB கொடுக்கப்பட்டதே தவிர அரசியல் காரணங்களுக்காக அல்ல. நானும் அவ் வட்டாரத்தின் அங்கத்தவன் என்பதை மறந்து உங்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்று பேசுவது பிழையான கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் அந்த JCB ஐ கடந்த ஆண்டில் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது இதே வாகனத்தைக் கொண்டு செப்பனிடுகின்ற போது என்னை ஊடகத்திலே பிழையாக சித்தரித்த வரலாறுகள் இருக்கின்றது. ஆனால் இன்று அவ் வேலைகள் எங்களுக்கு தெரியாமல் செய்யப்படுகின்றது. 03 உறுப்பினர்கள் கொண்ட வட்டாரம். ஒரு மின்குமிழை போடுவதாக இருந்தாலும் கஸ்டமாகத்தான் இருக்கின்றது. ஏனைய உறுப்பினர்களுக்கு 65 மின்குமிழ்கள் போட முடியுமாக இருந்தால் எங்களது வட்டாரத்தில் எவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, சபையில் உரையாற்றும் போது பணிவாக உரையாற்ற வேண்டும். உங்களுக்கு செய்த விடயங்கள் ஒன்றும் வேறு உறுப்பினர்களுக்கு செய்யவில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களின் நிதியினால்தான் பல அபிவிருத்திகளை செய்திருக்கின்றோம். இந்த சபையினால் எந்தவிதமான அபிவிருத்திகளும் செய்யவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, எந்த அமைச்சர் தந்தாலும் அதை தெளிவாக சபையில் அந்த அமைச்சருக்கு நன்றிகூறி இந்த சபையினால்தான் செய்யப்படுகின்றதே தவிர அது கௌரவம் கொடுக்கப்படுகின்றது. நீங்கள் இவ்விடத்தில் வீரமுனை வட்டாரத்திற்கு நான்மட்டும்தான் பொறுப்பு என்று கூறுவது பொருத்தம் இல்லாத ஒரு விடயம். அதற்கு வித்திட்டவன் நான் அதையிட்டு வருந்துகின்றேன். ஆனால் சபைக்கு ஒரு கௌரவம் இருக்கின்றது. மேடைப்பேச்சு பேசுவது போல் வீராப்பு பேசுவதில் அர்த்தமில்லை. எதையும் ஒழுங்காக பேசுவதற்கு நீங்கள் பழகாவிட்டால் மீண்டும் ஒரு முறை இந்த சபை உங்களுக்கு சபையில் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் தருவது கஸ்டமாக இருக்கும் என்று கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாங்கள் களவிஜயம் செய்து பார்வையிட்ட விடயம் சம்மந்தமாக நான் பேச விரும்புகின்றேன். கௌரவ உப தவிசாளர் அவர்கள் உரையாற்றுகின்ற போது நாங்கள் பார்க்காத வீதிகள் இணைக்கப்பட்டுள்ளது என்று கூறினார். ஆனால் பார்த்த வீதிகளே இதில் இணைக்கப்படவில்லை. இந்த விடயம் சம்மந்தமாக களவிஜயம் மேற்கொண்ட போது 05 கௌரவ உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டும் 04 கௌரவ உறுப்பினர்கள் பார்வையிட்டோம். ஆனால் இறுதி அறிக்கை செய்கின்ற போது எந்த உறுப்பினரும் இருந்து செய்யவில்லை. அவ்வாறு செய்திருந்தால் அதற்கான அழைப்பு கௌரவ உப தவிசாளர் அவர்களால் விடுக்கப்படவில்லை. இதிலே எமது பிரதித் தவிசாளர் அவர்கள் உரையாற்றிய போது சம பங்காக பணத்தை பிரித்துக் கொடுத்து வேலை செய்ய வேண்டும் என்று கூறினார். அங்கத்தவர்களை திருப்திப்படுத்துவதற்காக சபை தேவையில்லை. ஊரிலே உள்ள மிக முக்கியமான தேவைகளை இணங்கண்டு அவைகளை செய்ய வேண்டும். எங்கு தேவை இருக்கின்றதோ அங்கு செய்ய வேண்டும். இன்று சம்மாந்துறை பிரதேச சபை எல்லையை எடுத்துக் கொண்டால் ஏறத்தாள அதிகமான கிராம சேவகர் பிரிவுகளிலே செய்வதற்கு வேலை இல்லை. ஆனால் ஒட்டுமொத்த சம்மாந்துறையினுடைய வேலைகளை செய்ய வேண்டிய தேவை மல்காம்பிட்டி வட்டாரத்திலே இருக்கின்றது.

நாங்கள் களவிஜயம் மேற்கொண்ட போது புளக் ஜே மேற்கு 2ம் பிரிவிலே சித்தாரா பாலர் பாடசாலை வீதி கடந்த 2016ம் ஆண்டு நகரத்திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சினால் செப்பனிட்டு ஒரு குறிப்பிட்ட தூரம் உள்ளது. அதனை நாம் செய்வதற்கு எல்லோரும் பார்வையிட்டோம். அந்த இடத்திலே சிறிய பாலர் பாடசாலை இருக்கின்றது. ஏறத்தாள் 40, 45 பிள்ளைகள் அப் பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள். இன்று நாட்டின் நிலமை சரியாக வந்தால் அந்தப் பாடசாலைக்கு மாணவர்கள் செல்ல வேண்டும். இதுதான் அந்தப் பாலர் பாடசாலை இருக்கின்ற பிரகாசம். இந்த வீதியை எங்களுடைய கௌரவ பிரதித் தவிசாளர் அவர்கள் இந்த பட்டியலிலே இணைக்கவில்லை. அதே போன்று எங்களுடைய கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கு அருகாமையில் இருக்கின்ற கல்வெட் ஏற்கனவே ஏறத்தாள 2 வருடங்களுக்கு மேலாக பேசப்பட்டு வந்த விடயம் அந்த திட்டதிலே உள்வாங்கலாம், இந்த திட்டத்தில் உள்வாங்கலாம் என்று அது நிராகரிக்கப்பட்டது. அவ்வாறே தென்னம்பிள்ளை கிராமத்தில் உள்ள கல்வெட் ஏதோ ஒரு திட்டத்தின் கீழ் மிக முக்கியமாக செய்ய வேண்டிய வேலை. அதனையும் விட்டுவிட்டு அதற்கு அருகாமையிலே இருக்கின்ற புதிய பாலத்திற்கு அருகாமையில் இருக்கின்ற வடிகானுக்கு மூடி போட வேண்டும் என்று நாங்கள் அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டோம். மரக்கட்டையை போட்டு அதற்கு மேலே மண் போட்டு அதனால் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இது இந்த பட்டியலிலே இணைக்கப்படவில்லை.

அதே போன்று சென்னல்கிராமம் 2ம் பிரிவிலே வைத்தியசாலை குறுக்கு வீதிக்கு கல்வெட் அமைக்க வேண்டும் என்று ஏறத்தாள இந்த சபைக்கு வந்த காலம் தொடக்கம் சில அமர்வுகளிலே பேசிக் கொண்டிருக்கின்றேன். அதனுடைய முக்கியத்துவம் என்னவென்று சொன்னால் அந்த வைத்தியசாலையிலே கற்பிணித் தாய்மார்களுக்கான மாதாந்த கிளினிக் நடைபெறுகின்ற இடம் ஒவ்வொரு கற்பிணித் தாய்மார்களும் அதனால் பணம் செய்கின்றார்கள். இவ்வாறான வேலைகள் இருக்கத்தக்கதாக இவ் வேலைகளை முன்நிறுத்தப்படாமல் ஏதோ தான் செய்வது சரி என்ற ரீதியில் செய்யப்பட்டதாக நான் கருதுகின்றேன். ஆகவே இவ்வாறான குழுக்கள் அமைக்க வேண்டும், குழுக்கள் பார்க்க வேண்டும், குழுக்கள் ஊடாக வேலை செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகின்ற போது அது சரியான முறையிலே நடைமுறைப்படுத்த வேண்டும். மிகவும் கவலையாக இருக்கின்றது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வைத்தியசாலை குறுக்கு வீதி போடப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போடப்பட்டுள்ளது ஆனால் எங்கு போட்டிருக்கின்றீர்கள் 12வது இடத்தில் போட்டிருக்கின்றீர்கள்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களும், கௌரவ உறுப்பினர்களும் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். கூட வந்தவர்கள் எதை செய்ய வேண்டும் என்று சொன்னார்களோ அதைத்தான் போட்டது. அதுமட்டுமல்ல அந்த கல்வெட், வீதியும் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களின் திட்டத்தில் வந்துள்ளது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
எந்த திட்டத்தில் போடப்பட்டுள்ளது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எந்த ஒரு வேலையையும் தடைசெய்யவில்லை. அப்படி ஒரு எண்ணமும் இல்லை. இது வந்த குழுக்களின் சிபார்சு. தான் மட்டும் என்று இல்லை. வளத்தாப்பிட்டியில் கௌரவ உறுப்பினர் வளர்மதி அவர்கள் எத்தனை மின்குமிழ் கேட்டு எத்தனை போடப்பட்டுள்ளது. கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்கள் எத்தனை மின்குமிழ் கேட்டு எத்தனை போடப்பட்டுள்ளது. ஏன் வளத்தாப்பிட்டி, மல்வத்தை சிறிய கிராமங்கள் என்பதனால், சென்னல்

கிராமம் - 01 பெரிய கிராமம். தான் மட்டும் இல்லை சகல வளங்களும் பங்கீடு செய்யப்பட வேண்டும். சபையை பொருத்தவரையில் ஏற்கனவே 60 மின்குமிழ்கள் வழங்கப்பட்டது என்று, இங்கு வந்திருக்கின்ற விடயங்களை பார்க்கின்ற போது தான் மட்டும் அல்ல உங்களது அபிவிருத்தி வேலைகளுக்கு நாங்கள் தடை விதித்திருக்கின்றோமா? நான் அப்படியான ஒரு எண்ணம் வைத்து நடக்கவில்லை. வந்த உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க செய்யப்பட்டது. இன்னும் இறுதி முடிவு எடுக்கவும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 60 மின்விளக்குகள் எனக்கு சொந்தமான இடத்திற்கோ, எனது பாதைக்கோ, எனது விருப்பப்படி பொருத்தவில்லை. நான் தந்த கோரிக்கைக்கு இந்த சபையின் தொழில்நுட்ப குழுவினால் அங்கீகரித்த பின்னர் பொருத்தப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அதனை மீண்டும் கலந்தாலோசித்து முடிவு எடுக்கின்றேன் என்று கூறி, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.